[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0—0.	வெளிநாடு ரூ.	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானதால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் மே மாதம் முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக்குறிப்பிடவேண்டும்.

விஷய அட்டவணை. பக்கம்.

ஒற்றுமை பாட்டு (சாமி. சிதம்பரனார்) 1
இந்து மத நூல்கள் (டாக்டர் R. P. பராஞ்சிபை M. A. D. SC.) 3
நமது பேரன்மார் உலகம் (H. G. வெல்ஸ்) 13
ஜோசியம் (ஈ. வெ. ரா.) 20
ஜோசிய விதண்டா வாதம் (சித்திர புத்திரன்) 28
வாய்வீச்சு வேண்டாம் (சாமி. சிதம்பரனார்) 29
ஏழ்மைக் கிரங்கல் பாட்டு (R. V. பொன்னம்பலம்) 33
தலை கீழ் (S. லக்ஷ்மிரதன் பாரதி M. A., B. L.) 35
பாவம் செய்ய லைசென்ஸ் (சோதனை விளக்கு) 41
மூடநம்பிக்கை (சித்திர புத்திரன்) 47
மதப்போட்டி (சித்திர புத்திரன்) 51
சுந்தராம்பாள் மீது பார்ப்பனர் பொறாமை 55
கர்ப்பத்தடை 57
செட்டிநாட்டில் சீர்திருத்தப் புரட்சி (படம்)

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு,

—————)o(—————

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 1. } ஈரோடு 1935 ஆகஸ்ட்டு 1. { இதழ் 4.

ஒற்றுமை.

(சாமி, சிதம்பரனார்.)

கும்மி மெட்டு.

1. ஒற்றுமை என்றுசொல் போதினிலே—ஒரு
உண்மை தொனிக்குது காதினிலே—இதை
வெற்றியுடனிங்கு கண்டிடவே—இந்த
மேதினி எங்கும் சென்றிடுவோம் (ஒற்றுமை)

2. வீர உணர்ச்சியைக் கொண்டிடுவோம்—நிலை
வேற்றுமை வேரைக் களைந்திடுவோம்—இந்தப்
பாருலகத்தினர் யாவரும் ஒன்றெனும்
பான்மையை யீங்குப் பரப்பிடுவோம் (ஒற்றுமை)

3. பிறப்பினுள் வேற்றுமை ஏதுமுண்டோ—என்று
பேதையர் தங்களைக்கேட்டிடுவோம்—அன்றி
இறப்பினுள் வேற்றுமை ஏதுமுண்டோ—என
ஏழையர் தம்மையும் கேட்டிடுவோம் (ஒற்றுமை)

4. மாந்தரின் உட்புறக் கருவியெலாம்—ஒன்றும்
மன்னியிருப்பதும் பொய்யாமோ—அவர்
ஏந்துடல் என்பு தசைநாரில்—சற்றும்
ஏற்றம் இழிவுகள் இல்லையன்றோ? (ஒற்றுமை)

5. உச்சி யிடத்துறை மாந்தர்களே—உங்கள்
உடலினுள் ஓடுதல் பொன்னீரோ?—நீர்
பச்சை படப்பதில் சொல்லிடுவீர்!—அவர்
பாழுடல் ஓடுதல் என்னீரோ? (ஒற்றுமை)

6. ஆதியில் வேற்றுமை கண்ட துண்டோ?—இதை
அறிஞரும் வாழ்க்கையில் ஆண்டதுண்டோ?-இங்கு
பாதியில் தந்நல வேட்கை கொண்டோர்—இந்தப்
பாரினில் நாட்டியே வைத்தனரே (ஒற்றுமை)

7. சாதியில் வேற்றுமை யானதுவே—இங்கு
சமயமும் வேற்றுமை யானதுவே—பின்னர்
நீதியில் வேற்றுமை யானதுவே—அது
நிறத்திலும் வேற்றுமை யானதுவே (ஒற்றுமை)

8. சிறப்பினில் வேற்றுமை யானதுவே—பின்பு
செல்வத்தில் வேற்றுமையானதுவே—சம
பிறப்பினுள் வேற்றுமை எண்ணியதே—இந்தப்
பேச்சுக்குக் காரணம் நண்ணியதே (ஒற்றுமை)

9. சாதியும் நீதியும் செல்வமுமே—எங்கும்
சமத்துவம் ஆகெனச் சாற்றுதுமே—எட்டு
மாதிரம் எங்கணும் செல்வமே—இந்த
மதிவளர் செய்திகள் சொல்வோமே (ஒற்றுமை)

10. ஒற்றுமை ஒற்றுமை வேண்டுமென்றே—வீணில்
உளறுவ தில்பயன் ஒன்றுமின்றே—உண்மை
ஒற்றுமை வேண்டின் உலகு றையும்—எல்லா
உயர்வையும் தாழ்வையும் போக்கிடுவோம் (ஒற்று)

இந்து மத நூல்கள்.

(டாக்டர், R. P. பராஞ்சிபை, M. A. D. Sc.)

கிறிஸ்துவர்கள், முகமதியர்கள், யூதர்கள் ஆகியவர்களுக்குத் தங்கள் தங்கள் மதத்திற்கு என்று மூலாதாரமான ஒவ்வொரு மத புஸ்தகம் இருப்பது போல் இந்துக்களுக்கு என்று ஒரு தனிப்பட்ட புஸ்தகம் கிடையவே கிடையாது. இந்துக்களுக்குள்ளாக பல மதப் பிரிவுகள் இருந்தாலும் அவையவைகளின் நடைகளுக்கும், குணங்களுக்கும், ஒழுக்கங்களுக்கு மேற்றாற் போல் பல்வேறு பிரிவுகளின் பிரமாணங்களும், கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று நேர் முரண்பாடாகவும், பொருத்தமற்றதாகவும் காணப்படும். இந்து மதத்திற்கு எண்ணற்ற புத்தகங்கள் இருக்கின்றன; இருந்தபோதிலும் கூட, அவைகளில் ஏராளமான நூல்களை மிகவும் பரிசுத்தமானதெனவும், அவைகளே தங்களுடைய மத சம்பந்தமானபுஸ்தகங்களெனவும் கருதப்பட்டு வருகின்றன.

இம்மாதிரியான மத புஸ்தகங்களில் சுருதியும், ஸ்மிருதியும், புராணமுமாகிய மூன்றுமே மிக முக்கியமானதென ஒப்புக்கொள்ளப்பட்டும், அங்கீகரிக்கப்பட்டுமிருந்து வருகின்றன. முதல் கூறப்பட்ட வகுப்பில் வேதங்களென கூறப்படுகின்றவைகள் யாவும் அடங்கியிருக்கின்றன. சிருஷ்டிகளுக்குக் கர்த்தாவாயிருக்கக் கூடியவனிடமிருந்து, அநேக ரிஷிகளால், உண்மையாகவே கேள்விப்பட்டவைகள் அனைத்து மட்டுமே அவ்வேதங்களில் எழுதப்பட்டிருப்பதாகப் பெரும்பாலும் நம்பப்பட்டு வருகின்றது.

ஆனால், அவைகள் யாவும் பல்வேறு ஆசிரியர்களால், ஆதியில் வழங்கிக்கொண்டிருந்த வடமொழி பாஷையில் எழுதப்பட்டிருந்த நூல்களையே ஒன்றாகத்தொகுக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகின்றது. அவைகளின் மூலவாக்கியங்கள் யாவும் ஒழுங்காகவே காப்பாற்றப்பட்டும் வரப்பட்டிருக்கின்றன. ஏனெனில் முற்காலங்களில், ஒரு பிராமணன் வேதங்களைக் கற்று, மனப்பாடம் செய்து, உரு போட்டுக்கொண்டு வரவேண்டுமெனவும், அவ்வாறு செய்வதற்காகவேண்டி அவன் தன்னுடைய பாலியதிசையை அதிலேயே செலவிட

வேண்டுமெனவும் கருதப்பட்டு வந்தது. ஆனால், பொதுவாகவே அவைகளின் அர்த்தமானது அவர்களால் அறிந்தும், தெரிந்தும் கொள்ளப்படவில்லை. அவர்கள்கல்வி பயில்வதென்பதானதுஇயந்திரங்களைப்போல் குருட்டுத்தனமாகஅப்படியே மனப்பாடம்செய்து ஒப்புவிப்பதுதானெனவும், அவைகளின் சப்தங்கள் கூட ஒரு மாதிரியான பரிசுத்தம் வாய்ந்ததுதானென்றும் கருதப்படக்கூடிய அளவிலேயே தானிருந்து வந்தது.

தற்காலத்தில், அதாவது சில ஆண்டுகளாக எல்லா வேதங்களும் பல அறிவாளிகளால் ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்ததின் பயனாக அவைகள், ஆதி காலத்திய ஆசிரியர்களின் நாகரீகமென்பது இத்தகையதென்பதைப்பற்றி அறிந்து கொள்ளுவதற்கு சாத்தியமான சில முக்கிய சாதனங்களுக்கு அஸ்திவாரமாயிருக்கின்றதென்பதாக ஏற்பட்டது. வேதங்கள்தான் இந்து மதத்திற்கே அல்லது பிராமணீயத்திற்கே மூலாதாரமெனக் கருதப்பட்டு வந்தபோதிலும் கூட, ஆதி காலத்திலிருந்து வந்த ரிஷிகள் இப்பொழுது உயிர்பெற்று, தற்காலம் தங்களுடைய சந்ததிகள் எனக்கூறிக்கொள்ளுபவர்களைப் பார்க்கும்படியாக நேரிட்டால் அப்பொழுது தங்களுடைய சொந்த நாகரீகத்தின் வம்சப்பரம்பரையாக உற்பவித்த சந்ததிகள் தான் என்பதையறிந்துகொள்ள முடியவே முடியாது. வேதங்களில் கூறப்பட்டிருக்கும் அனேக பழக்கவழக்கங்களும், ஆச்சார அனுஷ்டானங்களும் கைவிடப்பட்டதாகவோ அல்லது முற்றிலும் மாறுபாடடைந்ததாகவோ தான் தற்காலம் காணப்படுகின்றது. அப்படியிருந்தபோதிலும் கூட, இந்துக்கள் என்பவர்கள் தாங்கள் வேதங்களையேதான் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளுகிறார்கள். வேதங்களில் கூறப்பட்டிருப்பதற்கும், அவர்களுடைய தற்கால நடைமுறைகளுக்கும் ஒன்றுக்கொன்று விரோதமாகவும், பரஸ்பர சம்பந்தமில்லாமலும், மாறுபாடாகவும் இருக்கின்றதேயென நாம் யாராகிலும் குற்றம் சாட்டினால் உடனே அவர்கள் யாவரும் "பழக்க வழக்கங்கள் சாஸ்திரங்களைப் புறக்கணிக்கின்றன. அல்லது கால்களால் மிதித்துத் தள்ளிவிடுகின்றன" என ஓர் சமாதானத்தை உறைத்துவிடுகின்றார்கள். ஆனால் உண்மையாகவே ஹிந்து மதத்தில் அபிமானமுள்ளவர்கள் யாவரும், வேதங்களை ஆராய்ச்சி செய்த அறிவாளிகளின் கண்டனங்களாலும், ஆக்ஷேபணைகளாலும் கோபமோ, ரோஷமோ அடைவதில்லை. மேலும், வைதீகத்திற்கே தாங்கள்

போன்று ஆதாரமாயிருக்கக்கூடிய யாவரும் வேதங்கள் யாவும் மனிதர்களால்தான் இயற்றப்பட்டதென்பதையும், அவைகள் மனித இயல்பிற்கு மேற்பட்டதல்லவென்றும், அற்புதமானவைகளல்லவென்றும், தெய்வாம்சம் பொருந்தியவைகளல்லவென்றும் கூறப்படும் நியாயத்தை யும்ஆதரிக்கக் கூடியவர்களாகவேதான் காணப்படுகின்றார்கள்.

ஸ்மிருதிகள்

அடுத்தபடியாக, ஸ்மிருதிகள் எனக்கூறப்படுபவைகள் அதி முக்கியமானவைகளெனக் கருதப்பட்டு வருகின்றன. ஸ்மிருதிகளோ அபரிமிதமாகவும், ஏராளமாகவும் காணப்படுகின்றன. அவைகள் கல்வியில் பாண்டித்தியமடைந்து நிபுணர்களெனக்கருதப்பட்ட மக்களால் மக்களின் வாழ்க்கைக் குறிய விதிகளைப்பற்றியும், சமூக ஸ்தாபனங்களின் போக்கைப்பற்றியும், நிலைமையைப்பற்றியும், ஒழுங்குகளைப்பற்றியுமுள்ள சட்டதிட்டங்களைப்பற்றியுமே எழுதப்பட்டவைகளாகும்.

உண்மையாகவே, அவைகள் ஒருவிதமான சட்ட புஸ்தகங்களாக வேதான் விளங்குகின்றன. ஆனால், எப்பொழுதுமே அவைகள் ஒன்றுக்கொன்று பொருத்தமென்பது சிறிதுமின்றி, முறண்பாடுடையவைகளாகவேதான் காணப்படுகின்றன மேலும், இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் அநேகவித ஸ்மிருதிகள் பிரமாணங்களாக எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றன. ஆதிகாலத்தில் ஆங்கிலேயே ஆட்சி இந்தியாவில் முதன் முதலாக ஏற்பட்டபொழுது சமஸ்கிருத ஸ்மிருதிகளில் பாண்டித்தியமடைந்து நிபுணர்களெனக் கருதப்பட்டவர்களின் உதவியைக்கொண்டேதான் ஆங்கிலேய நீதிபதிகளால் இந்தியாவில் அரசியல்சட்டங்கள் வழங்கப்பட்டு வந்தன. ஏனெனில், அவர்களுடைய தீர்ப்புகளும், ஹிந்து சட்டங்களையே அனுசரித்ததாக இருக்கவேண்டுமெனக் கருதியதால் இத்தகைய கொள்கையை அவர்கள் கையாளும்படி நேர்ந்தது.

ஸ்மிருதிகள் மக்களின் எண்ணங்களைப் படிப்படியாக வெளிப்படுத்தி அவைகளை விரித்துரைப்பவைகளாகவேதான் காணப்படுகின்றன. ஆனால் ஆங்கிலேயர்களின் ஆட்சியானது காளாவட்டத்தில் ஆதிக்கம் பெற ஆரம்பித்தது முதற்கொண்டு அவர்களுடைய சட்டங்களே சாஸ்வதமாக இருக்கும்படி நேர்ந்தது. இக்காரணத்தாலேயேதான் சமூக

ஸ்தாபனங்களின் முன்னேற்றமானது தடைப்படும்படியாக நேர்ந்தது. தற்கால இந்து இந்தியாவில் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் பழக்கவழக்கங்கள் யாவும் தற்கால நிலைமைக்கு முற்றிலும் விரோதமாகவும், மாறுபட்டும் காணப்படுவதற்கு இதுவுமோர் காரணமேயாகும்.

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக ஹிந்து இந்தியாவின் நிலைமையானது எத்தகைய ஸ்திதியிலிருந்து கொண்டுவந்ததென்பதை ஸ்மிருதிகளெனக் கூறப்படும் இப்புஸ்தகங்கள் நன்றாக விளக்கிக் காண்பிக்கின்றன. அநேக விதங்களில் அந்நிலைமையானது மாறுபட்டோ, அல்லது அடியோடு மறைந்தோ இருந்தபோதிலும்கூட, பெரும்பான்மையான மக்கள், தாங்கள் அப்பழைய கொள்கைகளையே பின்பற்றுவதாகத்தான் இன்றும் நம்பிக்கொண்டும், திருப்தியுடனுமிருந்துகொண்டுந்தான் வருகின்றார்கள். வைதீக ஹிந்துக்களிடம் நாம் ஏதாயினுமொன்றைக் குறித்து வார்த்தையாடுவோமானால் அப்பொழுது அவர்கள் யாவரும் அநேகமாக ஸ்மிருதிகளிலுள்ள வாக்கியங்களையே மேற்கோளாகவும், பிரமாணங்களாகவும் எடுத்துக் காண்பித்து, அவைகளுக்கு நாம் கட்டுப்பட்டு நடந்துதான் தீரவேண்டுமென ஓர் முடிவும் கூறிவிடுவார்கள். ஆனால் அனேகமாக இரண்டு கட்சிக்காரர்களும் இம்முடிவை அங்கீகரித்து ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். அப்படியிருந்தபோதிலுங்கூட இருவரும் தங்களுக்கனுகூலமாகக் காணப்படும் வாக்கியங்களை எடுத்துப் பிரமாணமாகக் காண்பிப்பதில் மட்டும் சிறிதும் பின்னடையவேமாட்டார்கள். இம்மாதிரியாகவேதான் விதவா விவாகத்தைப்பற்றிய பிரச்சினைகள் உண்டாகும்பொழுதெல்லாம் அம்மாதிரியான விவாஹமென்பது கூடவே கூடாதெனத் தடுப்பதற்கும் அந்த ஸ்மிருதிகளேதான் பிரமாணமாக எடுத்துக் காட்டப் பட்டு வருகின்றன. இக்காரணத்தாலேதான் இப்பரிதாபகரமான விஷயத்தில் இந்தியர்களின் பழக்க வழக்கங்கள் எத்தகையதாயிருந்திருக்கக்கூடுமென திட்டமாய்க் கூறுவதற்கு முடியாமலிருந்துகொண்டு வருகின்றது.

புராணங்கள்.

இனி மூன்றாவதாகப் புராணங்கள் எனக் கூறப்படுபவைகள் ஹிந்துக்களின் வேதங்களெனவும், அவைகள் மிகவும் பரிசுத்தம் வாய்ந்ததெனவும் கருதப்பட்டு வருகின்றன. ஆனால், இப்புராணங்களோ ஸ்மிருதிகளைவிட ஏராளமாகக் கணக்கு, வழக்கற்றுக் காணப்படுகின்றன. மேலும் இப்புராணங்களில் நா

னாவிதமான கதைகளும் கூறப்பட்டிருப்பதுடன், சில உண்மை விஷயங்களும் அவைகளுடன் கலந்துதானிருக்கின்றன. ஆனால் இவ்வுண்மை விஷயங்களை அக்கதைகளினின்றும் வேறாகப்பிரிப்பதென்றால் அது ஓர் முடியாத காரியமேயாகும். இப்புராணங்களில் எல்லா மக்களுக்கும் முக்கியமாய்த் தெரிந்திருப்பவைகள் இராமாயணமும், மகாபாரதமுமெனக் கூறப்படும் இரண்டு இதிகாசங்களேயாகும். கிறிஸ்துவின் சகாப்தம் ஆரம்பமான காலத்தில் இந்தியாவின் நாகரீகம் எத்தகைய நிலையிலிருந்ததென்பதைக் குறித்து இவ்விரண்டு புஸ்தகங்களும் விளக்கமாகவும், விரிவாகவுமெடுத்துரைக்கின்றன. இரண்டு புஸ்தகங்களிலும் அநேக பாகங்களிருக்கின்றன. மேலும் இடையிடையே அடிக்கடி மாறுதல்களும் ஏற்பட்டிருப்பதாக நினைக்கவேண்டியிருக்கின்றது. ஏனெனில், மேற்கூறிய இரண்டு புஸ்தகங்களும் பெருமை வாய்ந்ததெனவும், கீர்த்தி வாய்ந்ததெனவும், பொது மக்களால் கருதப்பட்டு ஓர் விசேட கௌரதை அவைகளுக்கு அளிக்கப்பட்டு வந்தபடியால், இடையில் தோன்றியவர்களில் சிலர் தங்களுடைய சொந்தக் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் எழுதி அப்புஸ்தகங்களுடன் சேர்த்து விடுவது அவர்களுக்குச் சாத்தியமாகவிருந்தது.

அப்புஸ்தகங்களில் கூறப்பட்டுள்ள கதைகளில் சிறிதளவு வேண்டுமானால் ஒருசமயம் உண்மையாயிருந்தாலும் இருக்கலாம். ஆனால் அக்கதைகளில் மனோகற்பனையினால் சிருஷ்டிக்கப்பட்ட விஷயங்களும், தெய்வீகம்பொருந்திய செய்கைகளுமே அளவுக்கு மீறிக்காணப்படுகின்றன. நடுநிலையிலிருந்து அப்புஸ்தகங்களை வாசிக்கக்கூடிய ஒருவருக்கு அவைகளில் காணப்படும் விஷயங்களில் சரித்திர சம்மந்தமான உண்மைகள் என்பது சிறிதுமில்லாதிருப்பது புலனாகாதிராது. அப்படியிருந்தபோதிலும் கூட, அதாவது, அக்கதைகளுக்குச் சிறிதும் சம்மந்தமில்லாத விஷயங்கள் இடையில் அடிக்கடி கூறப்பட்டிருந்தபோதிலும் கூட அவைகள் யாவும் மிகவும் உபயோகமுள்ளதாகவேதானிருக்கின்றன.

முற்கூறிய புராணங்களும், இதிகாசங்களும் தான் ஹிந்து மதத்தில் அறிவு வளர்ச்சிக்கான மூலாதார புஸ்தகங்களென சாதாரண பாமர மக்களால் பெரும்பாலும் கருதப்பட்டு வருகின்றது. அது எப்படியிருந்த போதிலும், ஒவ்வொரு கதையிலும் கண்டனங்களுக்குட்படாத சொற்பொருள்களுள்ள சில

உண்மைகளும் போதிந்தேதான் விளங்குகின்றன. மேலும் கற்பனா சக்தியினுதவியால் எழுதப்பட்ட கதைகள் யாவும், பெரும்பாலும்உண்மையில் நடந்ததுபோலவே அவ்வளவு அழகாக வர்ணித்துக் கூறப்பட்டிருக்கின்றன. சில புராணங்களோ, அளவுகடந்த, பெரும் பொய்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. கிறிஸ்துவர்களின் சத்திய வேதமாகிய பைபிளில் காணப்படும் சில கதைகள் எவ்வாறு குழந்தைகளால் கற்பதற்குத் தகுதியற்றவையெனக் கருதப்படுகின்றதோ, அவ்வாறேதான் இப்புஸ்தகங்களில் காணப்படும் சில கதைகளும் குழந்தைகளால் கற்பதற்குத் தகுதியற்றவையேயாகும். இன்னும் சில கதைகளோ, ஏதாகிலும் குறித்த ஓர் ஜாதியையோ அல்லது வகுப்பையோ அளவுகடந்தும், வெளிப்படையாகவும் ஸ்தோத்திரம் செய்து, புகழ்ந்து பாராட்டுவதோடு கூட, ஏனைய இதர ஜாதிகளையும், வகுப்புகளையும் பழித்துத்தூற்றுவதிலும் சிறந்துவிளங்குகின்றன. இக்காரணத்தாலேயே தான், பிராமணரல்லாத ஏனைய சமூகத்தார்கள் சில புராணங்களின் மீது வெறுப்புக்கொள்ளவும், அவைகள் பொய்யென்றெண்ணவும் மேற்படுகின்றது.

ஹிந்துக்களால் மிக்க விசேடமானதென பயபக்தியுடன் கருதப்படும் புஸ்தகங்களிலெல்லாம் தலைசிறந்து, முதன்மையாகவிளங்கக்கூடியவைகள் பகவத்கீதையும், உபநிஷத்துக்களுமேயாகும். இவைகள் பெரும்பாலும் தத்துவ சாஸ்திரத்திற்குரியவைகளையே போதிக்கின்றன. தங்களுடைய நித்திய தினசரி வாழ்க்கையில் கீதையில் ஓர் அத்தியாயத்தைத் தினந்தோறும் தவறாமல் வாசித்துக்கொண்டேதான் வரவேண்டுமென்பது ஒவ்வொருவருடைய அத்தியந்த கடமையெனவும், அதுவேஒரு புண்ணியமெனவும் ஹிந்துக்களிலனேகர் கருதி அவ்வாறே நடந்து கொண்டு வருகின்றார்கள். அவைகளைப்பற்றி நாம்இங்கே விளக்கமாக உரைப்பதென்றால், அது முடியாத காரியமேயாகும். ஆகையால் ஒவ்வொரு அறிவாளியும், ஆராய்ச்சிக்காரரும் தங்கள் தங்களுடைய பகுத்தறிவினுதவியைக் கொண்டு அவைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டு மென்று நாம் பெரிதும் விரும்புகின்றோம். கீதை போதிப்பதின் முக்கியாம்சத்தைக் குறித்துப் பல அபிப்பிராய பேதங்களிருந்து கொண்டுதான் வருகின்றன. அதாவது கீதையானது கர்மத்தைப்பற்றித்தான் போதிக்கின்றதெனச் சிலரும், பக்தியைப்பற்றித்தான் உபதேசிக்கின்றனவென சிலரும் கூறிக்கொண்டு வருகின்றார்கள். மேலும் அரசியல் வாதிகளிலனேகர் பெரும்பாலும் கீதையில் காணப்படும் சுலோகங்களையே பிரமாணமா

கவும், மேற்கோளாகவும் அடிக்கடி எடுத்துக்காட்டும் வழக்க முடையவர் களாயிருக்கின்றனர் ஆனால், உண்மையாகவே கீதையில் அங்குமிங்குமாகக்காணப்படும் சுலோகங்களைப் பெரும்பாலும் நாம் எத்தகைய காரியங்களுக்கும் எக்காலத்தி லும் பிரமாணமாகவும், மேற்கோளாகவும் எடுத்துக்கூற லாம்.

நாம் இதுவரையிலும் கூறிக்கொண்டு வந்த, வடமொழி யில் எழுதியிருக்கப்பட்ட கிரந்தங்களைத் தவிர்த்து, ஒவ் வொரு வகுப்பினருடைய தாய்பாஷையிலும் ஏராளமான மத சம்பந்தமான புஸ்தகங்கள் காணப்படுகின்றன. இப்புஸ்தகங் கள் யாவும், பெரும்பாலும், பயபக்தியுடனும், ஆசார அனு ஷ்டானங்களுடனும் தான் ஓதப்பட்டும், போதிக்கப்பட்டும் வருகின்றன. துக்காராம் அவர்களால் இயற்றப்பட்ட 'அப் ஹஸ்காஸ்' எனக்கூறப்படும் மத சம்பந்தமான மந்திரங்கள் இன்றும் மகாராஷ்டிர தேசத்தில் வாழ்ந்துகொண்டு வரும் மக்களால் ஓதப்பட்டு வரப்படுகின்றது. பல்வேறு ரிஷிகளின் ஜீவிய வாழ்க்கையானது, பொதுவாகவே, மக்களுக்கு ஓர் தூண்டுகோலாக இருந்து கொண்டு வருகின்றது. மேலும், அவர்களுடைய வாழ்க்கையில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு சம்பவங்களையும், படித்த அறிவாளிகளென்பவர்கள் கூட யாதொரு வித கண்டனமோ, ஆக்ஷேபணையோயின்றி, அப் படியே அவைகளை நம்பிக்கொண்டு வருகின்றனர்; அன்றியும் அவர்களைக்குறித்துக் கூறப்படும் அதி அற்புதமான, இயற் கைக்கு மீறிய கதைகளையும் ஆக்ஷேபணையின்றி உண்மை யென்றே நம்பிக்கொள்ளுகிறார்கள். அக்கதைகளில் கூறபப ட்டிருக்கும் சன்மார்க்க போதனையானது, ஆச்சரியப்படத் தக்க விதமாகத்தான் அமைக்கப்பட்டு, கூறப்பட்டிருக்கிறதெ ன்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. ஆனால் கால இயல்பு களுக்குத் தகுந்தவாறு ஒருவன் தன்னைத்திருத்திக்கொள்ளா மலும், பொருந்தாத பழய பழக்க வழக்கங்களுடன் எதிர்த் துப் போராடாமலும், என்ன நேரிடினும் அப்படியே அவை களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டுமெனவும், விதி யை வெல்ல ஒருவராலும் முடியாதெனவும், தாங்கள் வணங் கும் குறித்த ஓர் தெய்வம் தங்களுடைய நித்திய வாழ்க்கை யில் ஏதாயினும் துன்பம் நேர்ந்தால், உடனே குறுக்கிட்டு தங்களைப் பாதுகாக்குமெனவும், அழுத்தந் திருத்தமாகவும், வற்புறுத்தியும் கூறப்பட்டிருக்கின்றது. அதனால் தான், இந் தியாவின் பெரும்பான்மையான மக்கள் விதிக்குக் கட்டுப்பட் டுத்தான் தீரவேண்டுமென்கிற மனப்பான்மையுடன் இருக்கும்

படி செய்துவிட்டது; அல்லாமலும் தங்களுடைய சுயமுயற்சியால் ஏதாயினும் ஓர் காரியத்தை வெற்றிகரமாக முடித்து, முற்போக்கடைவதற்கு, அல்லது முன்னேறுவதற்கு சாத்தியமில்லாதவர்களாகவும், அதாவது கோழைகளாகவும் செய்துவிட்டது. மேலும் குறிப்பாக, தற்கால சமூக வாழ்க்கையைக் குறித்த வரையிலும் நாம் நமது முன்னோர்களாகிய ரிஷிகளின் வாழ்க்கையைக் குறித்துப்பேசி, இவ்வுலக வாழ்க்கை அநித்தியமானதென கூறிக்கொண்டிருப்பதானது சிறிதும் பொருந்தாக்கூற்றேயாகும்.

விவேகிகளான பகுத்தறிவாளர்கள் இந்நூல்களில் நன்மையை விளைவிக்கத்தக்க பாகங்களை தெரிந்து பாதுகாத்து, அவைகளை ஆராய்ச்சி செய்து, குணங்களை மட்டும் கிரகித்துக்கொள்ளும்படியான மார்க்கங்களைக்கண்டறிய முயற்சி செய்யவேண்டும். இச்சந்தர்ப்பத்தில் நாம், ஒவ்வொருவருடைய மனத்திலும் ஆழமாகப்பதியவைக்க வேண்டுமென விரும்புவது யாதெனில், நாம் வெற்றுரை வீரர்களாக விளங்காமல், இந்த நூல்களை ஆராய்ச்சி செய்யும்பொழுது, நமது பகுத்தறிவை உபயோகிக்க வேண்டுமெனபதேயாம்.

நாம் இதுவரையிலும் ஹிந்துக்களின் மத சம்பந்தமான புஸ்தகங்களைப்பற்றி சுருக்கமாகக் கூறிக்கொண்டு வந்ததிலிருந்து, இந்தியாவிலிருக்கும் பகுத்தறிவாளர்களின் குண தோஷ விசாரணைக்குரிய வேலையானது கிறிஸ்துவர் தேசங்களில் வசிக்கும் பகுத்தறிவாளர்களின் வேலையைப்போல், அவ்வளவு கடினமானதாயும், கஷ்டமானதாயுமிராதெனப் புலப்படும். அவர்களுடைய ஆக்ஷேபணைகளையும், கண்டனங்களையும், செய்கைகளில் காண்பித்து, அனுஷ்டானத்தில் கொண்டுவர மக்களுக்குப்போதிய திடத்தையும், தைரியத்தையும் ஆதரவையும் அளிக்க வேண்டியதேதான். இந்திய சீர்திருத்த வாதிகளிற்சிலர், ஏதாவது குறித்த ஓர் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றால், ஆதிகாலத்திய மத புஸ்தகங்களின் மீதுதான் தங்களுடைய முழுப்பொறுப்பையும் சுமத்தக்கூடிய மனப்பான்மை வாய்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். ஏனெனில், "வேதங்களுக்குத் திரும்புங்கள்" என்னும் முழக்கம் நமது செவிகளில் அடிக்கடி விழுகின்றது. இவர்கள் இம்மாதிரியாகக்கூறி மக்களைத் திருப்புவதானது சில விஷயங்களில் ஏதாவது நன்மையையே விளைவிக்கக்கூடியதாக விருந்தபோதிலும் கூட, அம்மத புஸ்தகங்களில் காணப்படும் சுலோகங்

கள் எத்தகையகொள்கையைவேண்டுமானாலும் ஆதரிக்கவும் எதற்கும் மேற்கோள்களாகவும், பிரமாணங்களாகவும் எடுத்துக் காண்பிக்க முடியுமென்பதையும் நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். பொதுவாகவே, நாம் எக்காரியத்தில் பிரவேசித்தாலும் நமது அறிவையே நாம் பிரதானமாகக் கொண்டு, அதன் வழியே செல்லவேண்டுமேயல்லாது நமது பாண்டித்தியத்தினாலேற்பட்ட யுக்தி, சாமர்த்தியம், தந்திரம் ஆகியவைகளின் சுழலில் அகப்பட்டுத் தத்தளிக்கக்கூடாது. நாம் ஏதாயினும் ஓர் சீர்திருத்தம் வழங்கவேண்டி நேரிட்டால், அச்சீர்திருத்தத்தால் மக்கள் அடையக்கூடிய பயனே நமக்குச் சீர்திருத்தத்தைவிடப் பதின்மடங்கு பிரதானமானது. அவ்வாறில்லையாகில், அச்சீர்திருத்தத்தினாலேற்படும் மாறுதலானது நாம் ஒரு அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு, மற்றொரு அடிமைத்தனத்திற் காளாகியதையே யொக்கும்.

மத புஸ்தகங்களெனக் கூறப்படுபவைகளில், பெரும்பான்மையான புஸ்தகங்கள் படிப்பதற்கு மிக்க சந்தோஷமுள்ளவைகளாகவும், அழகானவைகளாகவுமே விளங்குகின்றன. மேலும், இந்தியாவின் ஆதிகாலத்திய நாகரீகம் எத்தகைய நிலைமையிலிருந்த தென்பதைப்பற்றி நமக்கு நேரிடையாக எடுத்துக்காண்பிப்பதற்கு வேறு ஒருவித ஆதாரங்களுமில்லாமலிருப்பதினால், நாம் நமது பழைய நாகரீகத்தை ஒருவாறு நிர்ணயிப்பதற்கு இம்மத புஸ்தகங்களில் நமக்கு வேண்டிய அநேக ஆதாரங்கள் காணப்படுகின்றன. எண்ணிக்கையற்ற பரம்பரைகளின் அநுபோகங்களையும், எண்ணங்களையும், கொள்கைகளையும், தத்துவங்களையும் அவைகள் தங்களுக்குள்ளாக அடக்கிக்கொண்டிருப்பதுமல்லாமல், முன்காலத்திலிருந்த பெரியார்களின் உயர்ந்த கருத்துகளையும் அவைகள் வலியுறுத்துகின்றன. ஆதிகாலத்திய இக்களஞ்சியத்தை மக்கள் கற்று நேரான வழிகளில் நடந்து கொள்ளுவதைப்பற்றி நாம் குறைகூற விரும்பவில்லை. ஆனால், விவேகமும், ஆராய்ச்சியுமின்றி மூடபக்தியுடனும், மூட நம்பிக்கையுடனும் அவைகளைத் தெய்வீகமுள்ளவைகளாகக் கருதுவதைத்தான் நாம் எதிர்த்துப் போராடுகின்றோம். மக்கள் இன்புற்று, ஆனந்தமடைவதற்கு விர்ஜில் என்பவரால் இயற்றப்பட்ட “ஈனாயிட்” என்னும் நூல் மிக்க அழகாகத் தான் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இக்காரணத்தைக்கொண்டே, அப்புஸ்தகத்தை ஏதாயினும் ஓர் இடத்தில் திடீரெனத் திறந்து, கண்களுக்கு முதலில் தென்படும் வாக்கியங்களை

வாசித்து, அதன் மூலமாக அடிக்கடி மத்தியகாலங்களில் ஜோசியங்கள் கூறப்பட்டு வந்தது நியாயமான முறைமை யாகாது. இம்மாதிரியாகவேதான் இந்தியாவில் வசிப்பவர் களாலும் ஹிந்துமத சம்பந்தமான புஸ்தகங்களையும் கையா ளப்பட்டு வரப்படுகின்றன. மதசம்பந்தமான எண்ணங்களை இப்புஸ்தகங்களினின்றும் அறவே யொழித்து நமது பகுத்த றிவினுதவியினால் இவைகளை ஆராய்ச்சிசெய்வோமேயா னால், அப்பொழுது இப்புஸ்தங்களில் எவ்வளவுதான் அழகாக வர்னித்துரைத்திருப்பதாகக் காணப்படும் பழைய காலங் களுக்கு மக்களைத் திரும்பக் கொண்டுபோவதனாலேற்படும் நன்மைகளைக்காட்டிலும், மக்களுக்குப் பதின்மடங்கு ஊக்க மும், முயற்சியும், வீரமும், சுதந்தர உணர்ச்சியுமேற்படச் சாதானங்கள் உண்டாகும்.

மேலும், இதர வகுப்பினர்களால் பரிசுத்தமெனவும், மத சம்பந்தமானவைகளெனவும் கருதப்படும் புஸ்தகங்கள் யாவை யும் எல்லா வகுப்பினர்களும் கற்று, அவைகளையும் ஆராய்ச் சிசெய்து, அவைகளில் காணப்படும் நன்மைகளை நாம் பின் பற்றுவதால் நமக்கு ஏதாயினும் அதனால் பிரயோஜனமேற் படுமா வென்பதையும் நாம் கவனித்தறிய வேண்டியது யோசி க்கத்தக்க விஷயமேயாகும். நாம் இம்முறையைப் பின்பற்று வதனால் நமது அறிவும், ஆராய்ச்சியும் விருத்தியடைந்து வருவதுடன், நமது வகுப்பினர்களால் மத புஸ்தகங்களென வும், அவைகள் பரிசுத்தம் வாய்ந்தவைகளெனவும் கருதப்ப டும் எல்லாப் புஸ்தகங்களையும் இதர வகுப்பினர்களும், மதஸ் தர்களும் கற்று, அவைகளை ஆராய்ச்சிசெய்தால் நமது மன தும் அப்பொழுது அவர்களுடைய செய்கைகளினால் பாதிக் கப்பட்டு, புண்படாதென்பது உறுதியே யாகும்.

———)o(———

"ஒரு மனிதன் தன் தோல்வியையும், குறைகளை யும், பலயீனத்தையும், சுமத்துவதற்கும், தனக்கு இசை ந்து வராத ஒரு விஷயத்தில் ஈடுபட்டு அது கைவரப்பெ றாமல் தவிக்கும் காலத்தில், தன் மனோவேதனையைத் தவிர்த்துக்கொள்ளுவதற்கும் ஓர் சாதகமாயிருக்க ஏற்ப டுத்திக்கொண்ட ஓர் கற்பனையும் ஓர் கருவியுமே கட வுள் என்பது?"

ஏர்வின் கிரட்வைசர்.

நமது பேரன்மார் உலகம்,

H. G. வெல்ஸ்.

C. R. D. மொழிபெயர்ப்பு.

உலக அறிஞர் H. G. வெல்ஸ் அவர்கள் ரேடியோ மூலம் அமெரிக்காவிற்கு "நமது பேரன்மார் உலகம்" என்னும் பொருள் பற்றி ஓர் ருசிகரமான பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு:—

"நமது பேரன்மார் உலகம்" என்னும் பொருள் பற்றிப் பேசும்படி என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பேச முன் வந்துள்ளேன். அதாவது வரப்போகிற நமது சந்ததியர்களான நமது பேரன்மார்களுக்காக இப்போதிருக்கிற நாம் எந்தமாதிரியான உலகத்தை தயாரித்துத் தரப்போகிறோம் என்பது அதன கருத்தாகும். அப்படியானால் நாம் நம்முடைய பேரன்மார்களுக்காக எந்த மாதிரியான உலகத்தை செய்துகொண்டிருக்கிறோம்? என்று உங்களை கேட்கிறேன். இத்தக்கேள்விக்கு என்னவிதமான பதில் சொன்னாலும் பொருந்தும். ஏனெனில் இதுவருங்காலத்தைப்பற்றிய பேச்சாகையால் யார் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். அதை எவரும் மறுக்க முடியாது.

தற்போது உலகில் மற்றொரு மகாயுத்தம் வருமா? வராதா? என்பதே எங்கு பார்த்தாலும் பேச்சாகவும், முக்கியமான பிரச்சினையாகவுமிருக்கிறது. இன்று என்னைப்பேசும்படிச் சொன்ன டைரக்டரவர்கள் நான் பேச ஆரம்பிக்கும் முன்னர் இதைப்பற்றி பேச வேண்டாமென கேட்டுக்கொண்டார். காரணம் ஜனங்கள் அதைப்பற்றி கேட்டுக்கேட்டு அலுத்து விட்டனராம். நாளை உலகத்தைப்பற்றி நான் பேச வந்திருக்கும் போது யுத்தம்! யுத்தம்!! என்று எங்கும் பேச்சாக இருக்கும் விஷயத்தைப்பற்றிப் பேசாமல் விட்டுவிடுவது சாத்தியமானதா? வருங்கால உலகத்தைப்பற்றி யோசிக்கும்போது யுத்தம் என்கிற பயங்கர பூதம் குறுக்கே நம் மனக்கண்

முன் நின்று நம்மை பயமுறுத்துகிறது. இதை எப்படி மறந்து விட்டு வேறு விஷயத்தை யோசிப்பது? ஆகவே வருங்கால உலகத்தின் அஸ்திவாரம் இந்த யுத்தப் பிரச்சினையைப் பொருத்தேயிருக்கிறது. அதைப்பற்றிக்கேட்கவோ, அன்றி யோசிக்கவோ இன்று நீங்கள் மறுத்தாலும் பிற்காலத்தில் அனுபவிக்கப்போவது நீங்கள் தான். எக்கேடாவது கெட்டுப்போகட்டும் நீங்கள் அதைப்பற்றி பேசவேண்டாம் நாங்கள் கேட்கப் பிரியப்படவில்லை என்று நீங்கள் சொல்லுவதனால் நான் அதைப்பற்றி பேசிப்பயனில்லை. ஆகவே நாம் அந்தப் பயங்கர யுத்தப்பிரச்சினை உலகத்தில் இல்லை என்றுதற்காலிகமாக பாவித்துக்கொண்டு—அதாவது உலகில் இனி யுத்தம் கிடையாது என்று நினைத்துக்கொண்டு வருங்கால உலகத்தைப்பற்றி யோசித்துப் பார்ப்போம்.

உலகில் செய்யப்படவேண்டிய காரியங்கள் எண்ணிறந்தன நம்முன்னே கிடக்கின்றன. அப்படிச் செய்யப்பட வேண்டிய பல திரப்பட்ட காரியங்களில் எனக்குத்தலை சிறந்ததாகவும், மேலானதாகவும் காணப்படுகிற சிலவற்றை உங்களுக்கு எடுத்துக்காட்டப் பிரியப்படுகிறேன். ஏனென்றால், நமது பேரன்மார் காலத்துக்குள் யுத்தப்பிரச்சினை தீர்ந்துபோய் விடும் என்று வைத்துக்கொண்டு பேசுவதானாலும், மனிதவர்க்கத்தைச் சின்னாபின்னப்படுத்தி வாட்டிவரும் மற்றொரு பெரும் பிரச்சினையுளது. அது எது? அதுதான் பொருளாதாரப் பிரச்சினை.

உலகில் மக்கள் இன்று இல்லாமையினால் படும் கஷ்டங்களைப்போல் என்றும் பட்டதாக எனக்குத் தெரியவில்லை. நாம் அனைவோரும் இன்று கெட்டகாலத்தில் அகப்பட்டு அவஸ்தைப்படுகிறோம். ஆசியாவில் மாத்திரமல்ல, ஐரோப்பாவில் மாத்திரமல்ல, அமெரிக்காவில் கூட உலகில் யாங்கணும் இந்தக்கஷ்டம் இருந்தேவருகிறது. இந்தபொருளாதாரத்தொல்லை இல்லாத இடம் கிடையவே கிடையா. வேலையற்றுத்திண்டாடும் மக்களின் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. அந்தோ! என்னசெய்வதென்று புலப்படாமல் திகைத்து நிற்கின்றனர். மேல்படியில் உள்ள 'அதிர்ஷ்டசாலிகளாக' கருதப்படும் செல்வவான்கள் நிலைமையும்கஷ்டத்தில்தான் இருக்கிறது. எப்படி எனில்? வியாபாரமில்லையே! முதலுக்கே மோசம் வருகிறதே! முன்போல கவலையின்றி இருக்க முடியவில்லையே! என்று விசனத்திலாழ்ந்து கிடக்

கிறார்கள். சகல தொழில்களும் சலனமற்று ஸ்தம்பித்து நிற்கின்றன. வியாபாரப் பொருள்கள் யாவும் விற்பனையின்றி தேங்கிக்கிடக்கின்றன எங்கும் சாவுகுறி! எங்கும் ஓலம்!! என்ன செய்வதென விளங்காது நாமனைவோருமே தியங்கி விழித்துக்கொண்டிருக்கிறோம். இம்மாதிரியான நிலைமை ஏன் உண்டாயிருக்கிறதென்பது கலங்கிக்கிடக்கும் நம்மூளைகளுக்கு விளங்கவில்லை. இந்நிலைமை இனி நம்மை என்னிலைமைக்குக் கொண்டுபோய் விடுமென்றும் நம்மால் அறிய முடியாமல் ஆகாயத்தை நோக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இது ஓர் மோசமான நிலைமைதான்.

ஆனால் ஒன்று. இன்றைய தினம் உலகில் ஒவ்வொரு உயிரும் கவலையின்றி வாழ போதுமான அளவுக்கு மேலாகவே பொருள்கள் குவிந்துகிடக்கின்றன, உணவுப்பொருள்களுக்குக் குறைச்சலா? உடைகளுக்குக் குறைச்சலா? இரும்பு இல்லையா? எஃகு இல்லையா? தகரம் இல்லையா? எது இல்லை? எல்லாமிருக்கிறது. அளவுக்கு மீறியுமிருக்கிறது. மனிதனுக்குத் தேவையான யாவும் தேவைக்கு மீறி மிஞ்சியுமிருக்கிறது.

இங்கு இப்படி யிருக்க பாருங்கள், அப்பக்கம் என்ன கோரக்காக்ஷி! என்ன மானக்கேடு!! என்ன அலங்கோலம்!!! கோடிக்கணக்கான, எண்ணிலடங்காத மக்கள் 'ஐயோ பசி', 'ஐயோ பசி' 'உடை', 'உடை' என்று ஓல மிடுகின்றனர். உணவுப்பொருள்களை வாங்க, உடை வாங்க கையில் செல்லாக்காசுமில்லை, வேலை யில்லை, வேலை யிருந்தும் போதுமான கூலியில்லை. அவர்களுக்குத் தேவையான பொருள்கள் கண் முன் குவிந்து கிடந்தும் அவர்கள் தொடமுடியாத நிலைமை. என்ன விந்தை!

ஒரு பக்கம் அபரிமிதமான உற்பத்தி, மறுபக்கம் கட்டுக்கடங்கா தேவை—இதுதான் ஆச்சரியமான காக்ஷி.

உற்பத்தியையும், தேவையையும் ஒன்றுபடுத்த முடியாத திகைப்பு. இன்று தொழிலும், வர்த்தகமும் பித்துப்பிடித்துத் தடுமாறும் நிலைமை இதுதான்.

இப்படிப்பட்ட மோசமான நிலைமையிலிருந்து மக்களை விடுவிக்க நான் ஏதோ பரிகாரம் கண்டுபிடித்து தயாராக வைத்திருப்பதாக நீங்கள் நினைத்துவிடவேண்டாம். ஆனால்

இதற்குப் பரிகாரம் இல்லாமலில்லை என்று உங்களுக்கு குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பரிகாரம் இன்றில்லாவிடில் நாளை கட்டாயம் கண்டுபிடிக்கப்படும். நானெடுத்துக்கொண்ட விஷயமான நமது பேரன்மாருலகத்தைப்பற்றிப் பேசுவதற்குமுன் மேற்சொன்ன பரிகாரம் எப்படியிருக்க வேண்டுமென்று அதன் சாயலை எனக்குத் தெரிந்ததை ஒருவாறு சொல்ல விரும்புகிறேன்.

இன்று இவ்வுலகம் இந்த அகோரமான நிலைமையில் இருப்பதின் மூலகாரண மென்ன ?

சில ஆட்களைக்கொண்டு அபரிமிதமான பொருள்களை சொற்ப காலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல் பெற்றுவிட்டோம். ஒரு பெரிய அமெரிக்கா வர்த்தகர் சொன்ன வார்த்தைகள் என் ஞாபகத்திற்கு வருகின்றன. அவ்வார்த்தைகளில் நமக்கு வேண்டிய பரிகாரம் இருப்பதை நான் பார்க்கிறேன்.

அவர் கூறினதாவது:— "இன்று நாம் அனைவோரும் சேர்ந்து மிகவும் சிக்கனச் சிலவில் நேர்த்தியானப் பொருள்களை பெருவாரியாக உற்பத்தி செய்ய, அதாவது கூட்டு உற்பத்தியைக் கண்டுவிட்டோம் ஆனால் அதை நாமெல்லோரும் சேர்ந்து அனுபவிக்க (அதாவது கூட்டு அனுபவிப்பை) நம்மில் ஒருவராவது வழிகண்டாரில்லை போனது போகட்டும். இனியாவது அதைப்பற்றி யோசிக்க ஆரம்பிப்போம்" என்று பொன்னேபோல் புகன்றுள்ளார்.

அந்தப்படிக்கே நாம் இப்போது சிந்திக்கத் துடங்குவோம்.

அவர் கூட்டு அனுபவிப்பு என்று சொன்னாரே, அதன் அர்த்தமென்ன ? அவர் பெருங்கருத்துக்களை தம் மனதில் வைத்து இவ்வார்த்தையைக் கூறினதாக எனக்குத் தோன்றவில்லை என்றாலும் பெருவாரியான உற்பத்தியைச் சமனாக்க இது பரிகாரமாய் இருக்கலாமோ என்று அசம்பாவிதமாகக் கூறியிருப்பதாகவே நினைக்கிறேன். ஆனபோதிலும், அவ்வார்த்தை அர்த்தபுஷ்டியுடையதே. அதில் ஐயமில்லை. நமது பேரன்மார் காலத்தில் இவ்வார்த்தைக்கு மதிப்பேர்ப்பட்டு விடுவதாகவே வைத்துக்கொள்வதோடு இந்த வார்த்தை தற்காலம் நாம் படும் துன்பங்களைப் போக்கக்கூடிய ஓர்

"மூலமந்திரமாகவும்" திகழும் என்பதாக வைத்துக்கொண்டு மேலே செல்லுவோம்.

கூட்டு உற்பத்தி என்றால் யென்ன? உதாரணமாக ஒரு தனித்த மனிதன் ஓர் சிறு பட்டரையில் ஒரு மோட்டார் செய்ய ஆரம்பித்து ஒரு முழுவருடம் கஷ்டப்பட்டு பார்வைக்கு விகாரமாயும், நேர்த்தியற்றதும், விலை அதிகமானதுமான (கதர் துணி போன்ற) மோட்டார் வண்டி செய்வதை போக்கி ஆராயிரக்கணக்கான மக்கள் ஒன்று சேர்ந்து சுலபமாகவும், சிக்கனமாகவும், வெகு விரைவாகவும், நேர்த்தியாகவும் எண்ணிரந்த மோட்டார்களைச் செய்து முடிக்கும்விதம் தான் கூட்டு உற்பத்தி என்பதாகும்.

ஆகாரப் பொருகள் முதல் சவரக்கத்திகள் ஈராக எல்லாப் பொருள்கள் கூட்டு உற்பத்தியின் மூலமே செய்யப்பட்டு வருகின்றன. இது நீங்கள் எல்லோரும் அறிந்த மிகச் சாதாரண விஷயம்.

சரி. உற்பத்தியில் கூட்டுரவைக் கையாடினபடி உற்பத்தி செய்த பொருள்களை அனுபவிப்பதில் இந்தக்கூட்டுரவை அப்படியே திருப்பிப்போட்டு பார்க்கலாம். எடை கட்டுமா என்று பார்ப்போம்.

ஒரு சிறு மனிதன் கஷ்டப்பட்டு சேமித்து தன் குடும்பத்திற்கென்று ஒரு சிறு வீடுகட்டிக்கொள்ளும் தன்னல மனப்பான்மையைப் போக்கி நாமெல்லோரும் ஒரு குடும்பம்—மனிதக் குடும்பம்—என்ற உணர்ச்சிபெற்று நமக்கெல்லோருக்குமாக ஒரு பெரிய, நவநாகரிக, கண்கவரத்தக்க, உன்னதமான, சுகாதாரமான நகரமொன்றை அகன்ற தெருக்களோடும், நந்தவனங்களோடும், நாடக மேடைகளோடும், உண்டிச்சாலைகளோடும், பலத்திரப்பட்ட தொழிற்சாலைகளோடும், இன்னும்பல வேண்டர்பாலனவைகளோடும் கட்டுவதாக உங்கள் மனதில் சற்று யூகித்துப் பாருங்கள் இதில்தான் கூட்டு அனுபவிப்பு என்னும் வார்தையின் பொருள் முழுமையும் புதைந்து கிடக்கின்றது

இதை சமூகம் முழுமையும் சேர்ந்து கூட்டுறவு மூலம் பொருள்களை வாங்குதல் என்று சொல்லலாம். கூட்டுற்

பத்தியால் விளைந்து பெருவாரியான பொருள்களான வீடு கள், வீட்டுச்சாமான்கள், மோட்டார் வண்டிகள் முதலிய இப்பெரும் பொருள்களை "எப்படி ஐயா ஒரு சமூகம் வாங்க முடியும்"? என்று நீங்கள் கேட்கலாம்.

இதில் சமூகச் சிக்கல்களும், பொருளாதாரச் சிக்கல் களும் மலிந்து கிடக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்ளுகி றேன். அச்சிக்கல்களையும் அதன் பரிகாரங்களையும் நான் இப்போது சொல்ல விரும்பவில்லை. அதற்கான திட்டங்களை நான் இப்போது உங்களுக்குக் கொடுக்க வரவில்லை-அதைப் பற்றி குறிப்பாக—இதுபோன்ற அபிப்பிராயத்தை உங்களி டம் உண்டாக்கவே இப்போது வந்திருக்கிறேன். நம்முடைய பேரன்மார்கள் இவ்வுலகை நடத்தும் காலத்து இப்போது காணப்படும் கஷ்டங்கள், அவற்றைப் போக்குவதற்கான வழிகள், பரிகாரங்கள் ஏற்பட்டுவிடும் என்று மட்டுமே சொ ல்ல விரும்புகிறேன்.

இப்போது நாம் பொருள்களை வாங்கும் விஷயத்தில் சமூகமாக சேர்ந்து வாங்கும் முறையைக் கையாளுகிறோம். இன்று வாங்கப்படும் பிரமாண்டமான யுத்தக்கப்பல்களும், மெஷின், பீரங்கிகளும் எப்படி எதைக்கொண்டு வாங்கப்படு கின்றன தெரியுமா? சிறுகச் சிறுகத் தந்த பணத்தைக் கொண்டல்லவா? ஆகாயக் கப்பல்களையும், நீர்மூழ்கிக் கப் பல்களையும், பீரங்கிகளையும் சமூகக் கூட்டுறவினால் வாங்கி வைத்திருக்கிற நாம் அழகிய ஓர் நகரத்தை அதே கூட்டுறவி னால் ஏன் வாங்கி அனுபவிக்கமுடியாது? உலகிலுள்ள எல் லாமக்களுக்கும் அத்யாவஸ்யமான உண்டி, உடை முதலிய வைகளையும் ஏன் அவ்விதமே சம்பாதித்துக்கொள்ள முடியா தெனக் கேட்கிறேன். கட்டாயம் முடியும். மக்கள் ஒன்று பட்டால் முடியாத காரியமும் உலகில் உண்டா? சமூகக் கூட் டுறவால் உற்பத்தி செய்த பொருள்களை சமூகக் கூட்டுறவின் மூலம் மிக எளிதாக வாங்கி சமூகம் முழுமையும் கவலை யின்றி அனுபவிக்கலாம்.

இதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

எது எப்படி இருந்தபோதிலும் நம்முடைய பேரன்மார் காலத்தில் யுத்தப்பிரச்சினை தீர்ந்து சமாதான உலகம் நில வும், பொருளாதாரச் சிக்கல்களும் நீக்கப்பட்டு சாந்தம் ததும்பி எழும் என நம்புகிறேன். நமது பேரன்மார் தோன்

றுவதற்கு முன்பதாகவே அறிவு வெள்ளம் எழும். அது உலகம் முழுமையும் பாயும்.

நாம் இப்போது எப்படி (தற்கொலை செய்து கொள்ளுவதற்காக) யுத்தத்தளவாடங்களை வாங்குகின்றோமோ அதுபோல் நம் பேரன்மார்கள் வீடுகளையும் உல்லாச நகரங்களையும் வாங்குவார்கள். அவைகளில் களிப்போடு வாழ்வார்கள். அவர்களின் பாட்டன்மார்களான நம்மைப்பற்றி பேசும்போது நம்மை எள்ளி நகையாடுவார்கள். "என்னடா நமது பெற்றோர்களான பாட்டன்மார்களுக்கு இந்தச்சிறிய சங்கதிகூட விளங்காமல் போயிற்றே! அட பைத்தியங்களே !! கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்யிக்கு அலைவாருமுண்டா ?" என்றெல்லாம் சொல்லி நம்மைப்பற்றிப்பரிதாபப்படுவார்கள். நம்முடைய முட்டாள்தனத்தைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

இவ்வளவெதற்கு, நம்முடைய ஆயுள் காலத்திற்குள் நாம் எவ்வளவோ மாறுதல்களைக் கண்டுவிட்டோம். ஆனால் வருங்காலத்தில் ஏற்படப்போகும் மாற்றங்களுக்கு இது உறை போடவும் காணாது.

இன்று துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரமாயிருப்பது உலகப்பொருள்கள் சரிவரப் பகிர்ந்து நிற்காமையே. அதோடு தனிப்பட்ட வியாபாரம், வருங்காலத்தில் இந்த தொல்லைகள் தகர்த்தெரியப்படும். நம் பேரன்கள் காலத்தில் வைத்திய சாஸ்திரம் விரியும், சுகாதாரச் சங்கங்கள் பெருகும், பொது நல உணர்ச்சி வீரிட்டெழும், பார்க்குந் திசைகள்தோறும் அற்புத அழகிய நகரங்கள் தோன்றும, களிப்பே உருவெடுத்து வந்ததென்று சொல்லக்கூடியபடி மக்கள் வலிமை பொருந்திய தேகங்களோடும், வசீகர முகங்களோடும் விளங்குவர். உடல்வலிமையிருந்தால் மனவலிமை தானாகவமையும். இப்படிபட்ட மக்கள் என்ன செய்துகொண்டிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள் ?

மூளைக்கு வேலை கொடுத்துக்கொண்டு புதிய விஷயங்களை ஆராய்வார்கள். புத்தம் புதிய பொருள்களை செய்துகொண்டிருப்பார்கள்.

———)o(———

ஜோசியம்.

(ஈ. வெ. ரா. எழுதியது.)

——)o(——

ஜோசியம் என்பது ஒரு மனிதனுடைய பிறந்த நேரத்தைக்கொண்டு அந்தச்சமயம் கிரகங்கள் இருந்த நிலைமைக்கேற்ப மனிதனுடைய பலா பலன்களைக் குறிப்பதென்பதாகும்.

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மனிதனின் வாழ்க்கை, அவனது பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம், சுகம், அசௌக்கியம், செல்வம், தரித்திரம், தொழில், மேன்மை, கீழ்மை, புத்திர களத்திர தன்மை எண்ணிக்கை, ஆயுள் முதலியவைகளைக் குறிப்பதாகும்.

இதைக் கூர்ந்து பார்ப்போமானால் மேல் கண்ட பலன்கள் ஜோசியத்தின் மூலம் உணரலாம் என்பது உண்மையாய் இருக்குமாயின் ஒரு மனிதனின் பிறந்த நேரத்தைக்கொண்டு அப்போதிருந்த கிரகங்களின் நிலையை அறிந்து பலன்களை கணிப்பது என்பதில் குறிப்பிட்ட ஜாதகனுடைய பலன் மாத்திரமல்லாமல் அவனது பலாபலனுக்குச் சம்பந்தப்பட்ட மற்ற அனேகருடைய பலன்களும் அதில் அத்துபடி ஆகிவிட வேண்டும் என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனென்றால் ஒரு ஜாதகனுக்கு செல்வம் வரவேண்டுமானால், வியாதி வரவேணடுமானால், உத்தியோகம் வரவேண்டுமானால், சாவு வரவேண்டுமானால் அவை வருவதற்கு ஹேதுவான மாற்றங்களும் இந்த ஜோசியத்தின் மூலம் அறிந்தாகவேண்டும். இவனால் மற்றவர்களுக்கு ஏற்படும் லாப நஷ்டங்களும், இவனுக்கு மற்றவர்களால் ஏற்படும் லாப நஷ்டங்களும் கணிக்கப்படும்போது இவனதுபலாபலன்களைப்போலவே மற்றவர்களது பல்ரபலன்களும் ஏற்கனவே அவனவன் ஜாதக பலனின் பயனாய் ஏற்பட்டதாகத் தான் இருக்கவேண்டும்.

உதாரணமாக ஒரு ஜாதகனுக்கு சொத்து திருட்டுப்போவதாய் வைத்துக்கொள்ளுவோம், அந்தச் சொத்தை திருடுகிறவனுடைய ஜாதகத்திலும் அவனுக்கு இன்னானுடைய சொத்து திருட்டுப்போகும் என்றும் அது இன்னவனுக்கு கிடை-

ரோஜா முத்தையா

க்க வேண்டும் என்றும் ஏற்பட்டிருந்தாலொழிய—அதற்குத் தகுதியான மாதிரி கிரக அமைப்பும்,அந்தப்படி கிரகம் அமைந்த நேரத்தில் அவரவர் பிறந்துமிருந்தாலொழியஇரண்டும் சாத்தியமான காரியமாக ஆகிவிடாது.

இதுபோலவே ஒரு ஜாதகன் மற்றொருவனை கொலை செய்வதாய் வைத்துக்கொள்ளுவோம். இதுவும் இந்த ஜாதகன் இன்னானைக் கொலை செய்து இன்ன பயன் அனுபவிப்பான் என்று பலன் இருப்பது போலவே இவனால் கொலை உண்ணப்பட்டவன் ஜாதகத்திலும் இன்னாறால் இவன் கொலை உண்ணப்பட்டு அதனால் இந்த ஜாதகனுக்கு இன்ன பலன் ஏற்படும் என்றும் இருந்துதானே ஆகவேண்டும்.

இதுபோலவே தான் எந்த ஒரு ஜாதகனுடைய பலனை கவனித்தாலும் அந்தப்பலனுக்கு சம்பந்தப்பட்ட எல்லா மனிதர்களுடையவும் ஜீவராசிகளுடையவும் அந்தந்தப் பொருள்களுடையவும் ஜாதகமும் சம்மந்தப்படாமல் ஒரு காரியமும் நடக்காது.

மனிதன் பிறக்கும்போது உள்ள நேரத்தைக்கொண்டு அந்த மனிதனின் வாழ்வின் பலாபலன் சொல்லப்படுவது போலவே வஸ்துக்கள், தாவரங்கள் முதலியவைகளுடைய பிறந்த நேரத்தைக்கொண்டும் பலாபலன்களைச் சொல்லலாம் அல்லவா?

உதாரணமாக ஒரு விக்கிரகம் செய்யப்பட்டால் அது செய்யத்தொடங்கிய நேரத்தையோ செய்து முடிந்த நேரத்தையோ கொண்டு அதன் வைபவத்தைக் குறிக்கலாம் என்று ஜோசியர்கள் கூறுகிறார்கள்.

அது உண்மையானால் இந்த பலன் என்பது விக்கிரங்களுக்கு மாத்திரமல்லாமல் உலகத்தில் செய்யப்படும் எல்லாப் பொருள்களுக்கும் பொருத்தமானது என்றுதானே சொல்ல வேண்டும்.

ஒரு கடியாரம், ஒரு லாந்தர், ஒரு பாத்திரம், ஒரு காற்காலி முதலியவைகளில் ஏதோ ஒன்றை வைத்துக்கொள்ளுவோம். அது செய்யத்துடங்கிய நேரமோ அல்லது செய்து முடிந்த நேரமோ, அல்லது வாங்கிய நேரமோ, குறித்துக்கொண்டால் அந்த நேரத்தில் இருந்த கிரக நிலைக்கேற்பமற்றும்

அதனுடை சலனத்துக்கு ஏற்ப பலாபலன்கள் குறிப்பிடக்கூடியதாகவே இருக்கவேண்டும்.

ஏனெனின் மனிதனுக்கும், விக்கிரகத்துக்கும் வாழ்க்கை எப்படி இருக்கின்றதோ அப்படித்தான் மற்ற ஜீவன் புல் பூண்டு சாதாரண வஸ்துக்கள் ஆகியவைகளுக்கும் இருந்து வருகின்றது.

ஒரு குதிரை பட்டத்துக் குதிரையாய் இருந்து பெருத்த சுகபோகமும் பெருமையும் அடைகின்றது. அதோடு கூடப் பிறந்த மற்றொரு குதிரை ஜட்கா வண்டியில் தினமும் கட்டப் பட்டு முதுகுப்பட்டை வாங்கப்படுவதோடு றெய்ன்ஸ் கயிற்றால் விதரில் அடி வாங்கி விதர் வீங்கி கஷ்டப்படுகின்றது.

இது அவற்றின் பிறந்த நேர கிரகாச்சாரப்பலன் என்று தானே சொல்லவேண்டும்.

இதுபோலவே ஒரே பாரையில் உடைத்த இரண்டு பாளக் கல்லுகளில் ஒன்று விக்கிரகமாகி பொன், வைர ஆபரணங் கள் அணிந்து தினம் 6 கால பூஜை, சதுர், பாட்டு, வைபவம், இரண்டு மூன்று பெண்ஜாதிகள், பல தாசிகள், வருஷா வருஷம் கல்யாணம், பெரிய ஆலயம், திருவிழா முதலிய வைபவங்களைப் பெருகின்றது. அதனோடு பிறந்த மற்றொரு கல் முனிசிபாலிட்டி கக்கூசுக்கு பாவப்பட்டு தினம் நூற்றுங்கணக் கான பேர் செருப்புக்காலால் மிதித்து அதன்மீது ஏறி மலபாதை கழிக்கவும் சதா விளக்குமாறு போட்டு அடித்து கழுவவும், போகின்ற வருகின்ற பேர் காரி உமிழவுமான பலனை அடைகின்றது. இதுவும் அந்தக்கல் பிறந்த நேரத்தின் பயனும் அப்போதிருந்த கிரகநிலைக்கேற்ப ஏற்பட்ட பலன் என்றுதானே சொல்லவேண்டும்.

அதுபோலவே ஒரே தொழில்சாலையில் ஒரே நேரத்தில் செய்யப்பட்ட இரண்டு கடியாரங்களை எடுத்துக்கொண்டால் ஒன்று மகாராஜா கையில் கட்டப்பட்டு சிறிதும் ஆட்டம் அசைவு இல்லாமலும் சரியாய் மணி காட்டிக்கொண்டு மேன்மையாய்இருக்கின்றது.

மற்றொன்றோ ஒரு கூலிக்காரன் கையில் சிக்கி கண்டபடி அடிபட்டு சாமான்கள் முரிந்து கடியாரமே கெட்டு மூன்றாம் நாளே குப்பைத்தொட்டியில் எரியும்படியாக ஆகிவிடுகின்றது.

இதுவும் அந்த கடியாரம் பிரந்த நேரத்திலோ அல்லது வாங்கப்பட்ட நேரத்திலோ கிரகங்கள் அமைந்திருந்தமையைக்கொண்டும் அதன் சஞ்சாரங்களைக்கொண்டும் ஏற்பட்ட பலன் என்றுதானே சொல்லவேண்டும்.

இதுபோலவே யாவரும் வெருக்கும் மலம் முதல்கொண்டு ஒவ்வொரு வஸ்துக்கும் அதனதன் பிரந்தநேரத்தின்பயனாய் பலாபலன் இருந்துவந்தால் தான் ஜாதகம் என்பதாக ஒன்று இருக்க முடியுமே ஒழிய மனிதனுக்கு மாத்திரம்தான் ஜாதகம் சொல்ல முடியும் என்றால் அதை யார் ஒப்புக்கொள்வார்கள்.

சிலர் குதிரைக்கும், யானைக்கும் ஜாதகம் வைத்திருப்பதும் பார்ப்பதும் நாம் பார்த்திருக்கிறோம்.

மனிதனுக்கு ஜாதக பலன் சொல்ல முடிகின்றபோது குதிரைக்கும், யானைக்கும், நாயுக்கும், கழுதைக்கும் சொல்ல முடியாது என்று சொன்னால் அது நியாயமாகுமா?

அதுபோலவே குதிரைக்கும், யானைக்கும், நாயுக்கும் ஜாதகம் பலன் சொல்லுவதாய் இருந்தால் கோழிக்கும், குருவிக்கும், பாம்புக்கும், தேளுக்கும், ஓணானுக்கும், பல்லிக்கும், ஈயுக்கும், எறும்புக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும், கிருமிக்கும் ஜாதக பலன் சொல்ல முடியாது என்று யாராவது சொல்ல முடியுமா?

கோழிக்கும், குருவிக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும், அதன் பிறந்த நேரத்தைக் கொண்டு பலன் சொல்லலாம் என்றால் மரத்துக்கும், செடிக்கும், புல்லுக்கும், பூண்டுக்கும் அது முளைத்த நேரத்தைக்கொண்டு ஏன் பலன் சொல்ல முடியாது?

ஆகவே வஸ்து என்று ஒன்று ஏற்பட்டு அது பிறப்பதற்கோ தோன்றுவதற்கோ ஒரு நேரமும் இருந்து அந்த நேரத்தைக் கொண்டு அப்போதிருந்த கிரக நிலையை அறியக்கூடிய எல்லாவற்றிற்கும் ஜோசியம் சொல்லலாம் என்பதுதான் ஜோசியத்தின் தன்மையாக இருக்கவேண்டும்.

இந்த முடிவு எப்படியோ ஆகட்டும். முதலாவதாக ஒரு மனிதனுடையவோ, ஜீவனுடையவோ பிறந்த நேரத்தை எப்படி கணிக்கமுடியும். பிரசவகாலத்தில் வயிற்றுவலி ஏற்பட்ட

நேரம் முதல் சிசுவானது கொஞ்சம் கொஞ்சமாய் வெளியாகிறது உருவம் வெளிப்பட்டு தலையோ காலோ தெரிந்து வெகு நேரம் சென்றும் சில சிசுக்கள் மணிக்கணக்கில் கீழே விழாமல் சிக்கிக்கொண்டும் இருக்கின்றன. கீழே விழுந்த நேரத்தையே எடுத்துக்கொள்வதாய் இருந்தாலும் பெரும் பான்மையான சிசுக்கள் விஷயத்தில் எப்படி சரியான நேரத்தைக் கண்டுபிடிக்க முடியும்.

ஒரு நாளைக்கு 16 முகூர்த்தங்கள் ஒரு முகூர்த்தத்திற்கு $3\frac{3}{4}$ நாளிகைதான் இருக்கின்றன. ஒவ்வொரு லக்கினத்துக்கும் $4\frac{1}{4}$ முதல் $5\frac{1}{2}$ நாளிகையும் ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கு சுமார் 60 நாளிகையும் உண்டு.

இதற்குள் பிறக்கும் குழந்தைகள் எல்லாவற்றிற்கும் கிரகம் நக்ஷத்திரம் என்பவை ஒன்றாகவேதான் இருக்க முடியும். உலகில் ஏற்படும் பிறப்பு இறப்புகள் எல்லாம் இந்த லக்கினத்துக்குள்ளும் இந்த நக்ஷத்திரங்களுக்குள்ளும தான் வந்தாக வேண்டும்.

அந்தப்படியே வந்து அதைக்கொண்டே பலன் சொல்லக் கூடும் என்றே வைத்துக்கொண்டாலும் மனிதனுடைய நித்திய வாழ்க்கை அனுபவத்துக்கும், பிறந்தபோது கிரகங்கள் இருந்து வந்த நிலைக்கும் எப்படி சம்பந்தம் இருந்துவர முடியும்? எப்படி இருக்கக்கூடும் என்பதை எந்தவான சாஸ்திரியாவது நக்ஷத்திர சாஸ்திரியாவது, ஜீவதத்துவ சாஸ்திரியாவது, உடல் தத்துவ சாஸ்திரியாவது, பொது விஞ்ஞான சாஸ்திரியாவது ஒத்துக்கொள்ளுகின்றார்களா?

ஜோசியம் என்பது பிறந்த காலத்தைக் கொண்டு, அப்போதிருந்த கிரக நிலையை அறிந்து சொல்வது என்பதோடு மாத்திரம் இல்லாமல் மற்றும் எதை எதையோ கொண்டு சொல்லக்கூடியதாய் இருந்து வருவனதாயும் பார்க்கிறோம்.

ஒரு ஜாதகனுக்கு பலன் சொல்ல அவன் ஜோசியம் கேட்க்கும்படியான நேரத்தை குறித்து அப்போது இருக்கும் கிரக நிலையை அறிந்துகூட சொல்லப்படுகிறது. மற்றும் ஜாதகனின்பேர் நாமத்தைக்கொண்டும், அவன் சொல்லும் எண்ணைக்கொண்டும், அவர் சரீரத்தில் தொடும் அங்கத்தைக்கொண்டும் இன்னும் என்ன என்னமோ ஆதாரங்களைக்கொண்டுட்சொல்லப்படுகின்றன.

இவைகளுக்கு எல்லாம் விஞ்ஞான சாஸ்திரம் இடம் கொடுக்கிறதா? விஞ்ஞானத்துக்கு அதாவது பஞ்சேந்திரியங்களால் அறியக்கூடிய தன்மைக்கு விரோதமாய் ஒரு காரியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லப்படுமானால் பிறகு உலகில் விஷயங்களை எப்படித்தான் நிர்தாரணம் செய்ய முடியும்.

ஒரு வஸ்து நிர்ணயத்துக்கோ ஒரு விஷய நிர்ணயத்துக்கோ ஏதாவது ஒரு முறை அல்லது விதி இல்லாவிட்டால் பிறகு எப்படித்தான் விஷயங்களை நிர்தாரணம் செய்ய முடியும்?

இந்த விஷயங்கள் ஒரு புறம் இருக்க; இந்த ஜாதக பலன்கள் மனிதனுக்கு இந்தப்படியெல்லாம் அமைவதற்கு ஒரு காரணமும் வேண்டி இருக்கிறது. ஏனெனில் மனித வாழ்க்கையின் தன்மையும் பலன்களும் அனுபவமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாய் இருப்பதை இயற்கை என்று ஒப்புக்கொள்ளாமல் இருப்பதால் அவற்றிற்கு காரணம் கண்டு பிடிக்கவேண்டி இருக்கிறது அதற்கு ஜோசியர்களும் மற்றும் கிரக பலன்களில் நம்பிக்கை உள்ளவர்களும் "கிரகங்கள் அந்தப்படியெல்லாம் அமைவதற்கே" காரணம் சொல்லுகிறார்கள். அதாவது ஒவ்வொருவருடைய கிரகாச்சார பலனும் ஜாதகன் பிறப்பதற்கு முன்னமே அமைக்கப்பட்டதற்கு அந்தந்த ஜாதகர்களின் முன் ஜன்ம கர்மத்தின் பலன் என்றும் அல்லது அவனுடைய முன் ஜன்ம நடத்தைக்கு தக்கபடி கடவுளால் விதிக்கப்பட்ட விதி என்றும் சொல்லப்படுகிறது.

ஜோசியத்தை ஒப்புக்கொள்ளுகின்றவர்களோ நம்புகின்றவர்களோ முன் ஜன்மம், முன் ஜன்ம கர்மம், அதை அனுசரித்து கடவுளால ஏற்படுத்தப்பட்ட விதி முதலியவைகளை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

அப்படி இல்லாவிட்டால் யாதொரு பழிபாவமும் அறியாத ஒரு ஜீவன்தான் பிறக்கும் போது நிஷ்காரணமாய் யதேச்சையாயும் இயற்கையாயும் அமைந்திருந்த கிரகங்களின் பயனாய் பலன்களை அடைவதென்றால் அதையும் இயற்கை என்று சொல்லாதவர்கள் அதற்கு ஏதாவது ஒரு காரணத்தைச்சொல்லித்தானே ஆகவேண்டும்.

ஆகவே அந்தக்காரணம்தான் முன் ஜன்ம கர்மத்தின் பலனாகவும் தலைவிதியாகவும் சொல்லப்படுவதாகின்றது.

இதை ஒப்புக்கொள்ளுவதனால் இதில் மற்றொரு பெரிய பிரச்சனை வந்து புகுந்து கொள்கின்றது.

அதாவது இம்மாதிரி அமையப்பட்ட கிரகங்களின் பலனாகவோ அல்லது முன் ஜன்மத்தின் கர்மத்தின் பலனாகவோ தலைவிதியின் பயனாகவோ கடவுள் சித்தத்தின் பலனாகவோ ஏற்பட்ட அல்லது ஒரு ஜாதகனால் செய்யப்பட்ட காரியங்களுக்கு மறுபடியும் பலன்கள் உண்டா என்பதும் அதற்கு அந்த ஜாதகன் பொறுப்பா என்பதும் அது அந்த ஜாதகனை எப்படி கட்டுப்படுத்தும் என்பதுமேயாகும்.

உதாரணமாக ஒரு ஜாதகன் ஒரு மனிதனைக் கொலைசெய்வதாக வைத்துக்கொள்ளுவோம். இந்தக் கொலையானது "இந்த ஜாதகன் இன்ன வருஷம், இன்ன மாதம், இன்ன தேதி இன்னகிழமை, இன்ன மணிக்கு, இன்ன ஊர், இன்னானை, இவ்விதமாய், கொலைசெய்வான்" என்று கொலை செய்தவனுடைய ஜாதகத்திலும், "இன்ன வருஷம், இன்ன மாதம், இன்ன தேதி, இன்னகிழமை, இத்தனை மணிக்கு, இன்னமனிதனால் கொலை செய்யப்படுவான் என்று கொலை உண்டவன் ஜாதகத்திலும் கர்மத்தின் பயனாலோ, ஆகவேகடவுள் சித்தத்தாலோ ஏற்பட்டில்லாமல் இக்கொலை எப்படி ஏற்பட்டிருக்கமுடியுமா?

அந்தப்படி விதி ஏற்பட்டிருக்கும் போது கொலை செய்பவன் இந்தக்கொலையை செய்யக்கூடாது என்று எவ்வளவு தான் கருதினாலும் அவனால் கொலை செய்யாமல் இருக்கமுடியுமா? அதுபோலவே கொலை உண்டவனும்தான் எவ்வளவு தான் ஜாக்கிரதையாய் இருந்தாலும் ஒரு தண்டவாளப் பெட்டியில் வைத்து பூட்டப்பட்டிருந்தாலும் கொலையிலிருந்து தப்பித்து இருக்க முடியுமா?

"அன்றெழுதினவன் அழித்தெழுதுவானா"

"விதியை யாரால் வெல்லமுடியும்"

"அவனவனின் முன் ஜன்ம கர்மத்தின் ப்யனை அவனவன் அனுபவித்தே தீரவேண்டும்"

என்றபடி விதியில் உள்ளது போல் நடந்து தானே தீரும். இந்தப்படி விதியினாலோ முன் ஜன்மக்கருமத்தின் பலனாலோ ஜாதக ரீதியாய் செய்யப்பட்ட இந்தக்கொலை

க்கும் கொலை உண்ணப்பட்டதற்கும் இந்த ஜாதகன் எப்படி ஜவாப்தாரியாக ஆகமுடியும்? ஜாதகனை எப்படி குற்றம் சொல்லமுடியும்? இதற்காக ஜாதகனுக்கு பாவமோ நரகமோ கர்மத்தின் பயனோ எப்படி ஏற்படும்?

இந்த ஜாதகனுக்கு பாவமோ நரகமோ எப்படி ஏற்படும் என்பது மாத்திரமல்லாமல் மக்கள் விதியின்படியோ முன் ஜன்ம கர்மத்தின் விளைவின்படியோ செய்யப்பட்ட காரியங் களுக்கு பாவம் என்றோ புண்ணியம் என்றோ எப்படி சொல் லலாம் அதற்காக நரகமோ மோக்ஷமோ அடுத்த ஜன்மத் தில் அடையவேண்டிய பயனோ எப்படி சித்திக்கும்.

ஆகவே மனிதன் அவன் செய்யுங் காரியங்கள் எல்லாம் ஜாதகப்பலன்படியும், ஜாதகப்பலன்கள் எல்லாம் விதிப்படி யும், விதி எல்லாம் முன்ஜன்ம கர்மத்தின் பலன்படியும் நடப் பதாய் இருக்கையில் பாவபுண்ணியம் என்ற பாகுபாடும், நற் செய்கை துர்செய்கை என்கின்ற பெயரும், எப்படி பொருந் தும்? மோக்ஷத்திற்கும், நரகத்திற்கும், அவசியம் தான் ஏது? அது எதற்காக இருக்கவேண்டும்?

கடவுள் தானாகட்டும் இந்த செய்கைகளுக்கு தீர்ப்பு களோ, விசாரணையோ, சன்மானமோ தண்டனையோ, எப் படி செய்ய முடியும்? என்பவைகளை யோசித்தால் ஜோசியம் என்பதாக ஒன்று இருக்க முடியுமா? அது பிறந்த நேரத்தைக் கொண்டு மனித வாழ்க்கையில் ஒவ்வொரு பயனும் சொல்ல முடியுமா?

அப்படி ஒரு சாஸ்திரம் இருக்க பகுத்தறிவின்படி சையன்ஸ்படி இடம் இருக்கிறதா? என்பவைகளை யோசித்து பார்க்கவேண்டும்.

ஜோசியம் என்பதைப்பற்றி இந்துக்கள், மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், முதல் எல்லா ஆஸ்திகக்காரர்களுக்கும், நம்பி க்கை இருந்து வருகின்றது.

சிற்சில மனிதர்கள் ஆஸ்திகர்களாய் இல்லாதவர்களும் ஜோசியத்தை நம்புகிறார்கள். ஏனெனில் அது ஒரு சாஸ்திரமென்றும் அதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை யென்றும் ஜோசியம் விஞ்ஞான பரீக்ஷையால் நிர்ணயக்கக்கூ டியதென்றும், ஆதலால் அது பிறந்த நேரத்தையும், நக்ஷத்தி ரங்களையும், கிரகங்களையும், பொருத்ததென்றும், நக்ஷத்தி

ஜோசிய விதண்டா வாதம்.

(சித்திரபுத்திரன்.)

வெள்ளைக்காரர்கள் ஜோசியத்தில் இந்தியர்களைப் போல் எத்தனை பெண்சாதி என்பதை அறிய இடம் இருக்குமா?

ஃ ஃ ஃ

திபேத்தில் இருக்கிற பெண்கள் ஜாதகத்தில் இத்தனை புருஷன் என்பதை அறிவதற்கு வசமிருக்கிறதுபோல் இந்தியாவில் விதவை மணமில்லாத பெண்களுக்கு இத்தனை புருஷர் இருக்கிறார்கள் என்று அறிய முடியுமா?

ஃ ஃ ஃ

இந்தியாவில் உள்ள மக்களுக்கு பூமி, கன்று, காலி வீடு வாசல், சொத்து இவ்வளவு என்று கண்டுபிடிக்க வசமிருப்பதுபோல் ரஷியர்களுக்கும் கண்டுபிடிக்க வசமிருக்குமா?

ரங்களும், கிரகங்களும், உண்மை ஆனதினாலும் பிரத்தியக்ஷ பிரமாணமானதினாலும். அதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், அனுபவத்திற்கு ஒத்து இருக்கிறதென்றும், இப்படி பலவாராகப்பேசி அதை ஒப்புக்கொள்ளுகிறவர்களும், நம்புகிறவர்களும், சமாதானம சொல்லுகின்றார்கள்.

இந்த சமாதானங்களைப்பற்றி பின் ஒரு சமயம் ஆலோசிப்போம். இப்போது இந்தப்படி ஒரு சாஸ்திரமோ பலனோ இருக்க நியாயம் உண்டா என்பதைப்பற்றி மாத்திரமே இவற்றைக்கொண்டு ஆராய்தோம்.

புரோகிதன், பண்டுமுதல் மனிதனால் மனிதனை மேன் மேலும் அஞ்ஞான இருளில் முழுகவைத்து அவனை அடிமையாகவும் கோழையாகவும செய்து வருகின்றான்.

பி. ஆர். லிலி,

வாய்வீச்சு வேண்டாம்.

(சாமி. சிதம்பரனார்.)

"ஏழைகளின் துன்பக்கண்ணீரைத் துடைக்க முன்வாருங்கள்! அவர்களுக்கு அன்போடு அறிவைக்கொடுத்துக் கைதூக்கி விட்டு மேன்மையடையச்செய்யுங்கள்! "சண்டாளனையும்" உங்கள் அன்பன் என்று கொண்டாடுங்கள்! வீணாக வாய்ச்சொல் வீரர்களாக மாத்திரம் இருக்கவேண்டாம்" என்பது விவேகானந்தர் அடிக்கடி கூறிவந்த அரிய மொழியாகும்.

இன்று பகுத்தறிவுஇயக்கம் கூறுவதும் இதுதான். இப்படிக்கூறும் பகுத்தறிவியக்கத்தார்களை மதப்பற்றுடையார்கள் நாஸ்திகர்கள் என்று சொல்லுகின்றார்கள். ஆனால் "நாஸ்திகர்கள்" விவேகானந்தர் கூறியதன் உண்மையைத் தான் இன்னும் விரிவாக "வியாக்கியானம்" பண்ணிக்காட்டுகிறார்கள்,

அதாவது:—"வருந்திச் சம்பாதித்த பணத்தினால்-அறியாத மக்களை ஏமாற்றிச் சம்பாதித்த பொருளினால் மோட்சத்திற்கு வழிதேடும் மூட்டாள்தனத்தை ஒழித்து விடுங்கள். பரலோகத்திற்கு அடிசோலும் பகுத்தறிவற்ற தன்மையை விட்டு விடுங்கள்! இவைகளெல்லாம் ஏழைகளுக்கு நன்மை செய்வதாகாது, பகுத்தறியும் அறிவின்றி வஞ்சகமாக வார்த்தைகள் பேசி, சோம்பேறித்தனமாக வாழ்க்கை நடத்தி பிறர் துன்பத்திற்குச் சிறிதளவும் இரக்கம் காட்டாமல் வாழும் குருமார்களின் காலில் விழாதீர்கள்! அதன் பொருட்டுக் காசை வீணாக்காதீர்கள்! அவர்களால் ஏற்படுத்தப்பட்ட நன்மை தீமைச்சடங்குகளின் மூலம் பணத்தைப் பாழ் பண்ணி மதியற்றவர்கள் என்ற பட்டங்கட்டிக்கொள்ளாதீர்கள்! இதனால் எல்லாம் ஏழைகளின் துன்பம் சிறிதும் நீங்கிவிடாது. அவர்கள் விடும் துன்பக்கண்ணீர் நின்றுவிடாது. உண்மையில் உங்களுக்கு ஏழைகளின் மேல் இரக்க மிருந்தால் அவர்களுடைய அறிவுக்கண்களைத்திறந்து விடுவதற்குக்கொஞ்சம்சாவதானத்துடன் முன்வந்து உதவி செய்யுங்கள்! அது தான் அவர்களுக்குக் கைகொடுத்துக் காப்பாற்றும் வழியாகும், என்றும்,

உங்களுடைய மற்ற வேலைகளையெல்லாம் கொஞ்ச நாளைக்கு மூட்டை கட்டிப்பரண்மேல் வைத்துவிடுங்கள்! உருவத்திலும், உடல் அமைப்பிலும், அறிவிலும், செயலிலும், பழக்கத்தினால் ஒத்துவரக்கூடிய மக்கட் கூட்டத்தில் ஒரு பிரிவினரை விலங்கினுங்கேடானவர்களென்று சுயநலக்காரர்கள் கூறும் சூழ்ச்சியின் வார்த்தைகளை நம்பாதீர்கள்! அவர்களைச் சண்டாளர்களென்றும், தீண்டாதவர்கள் என்றும்கூறும் சதிமொழிகளை வெட்டி வீழ்த்துங்கள்! அவர்களுக்குக் கைகொடுத்து மனித சமாஜத்தோடு ஒன்றுப்பட்டு வாழும்படி செய்யுங்கள்! என்கிறார்கள் இதைத்தான் விவேகானந்தரும் சொன்னார். பகுத்தறிவு இயக்கமும், சொல்லுகின்றது.

"நீ உன்னுடைய முக்திக்கு மாத்திரம் வழிதேடுவாயானால் உனக்கு நரகந்தான் கிடைக்கும், பிறர் நன்மைக்காக உழைத்தால்தான் உனக்கு முத்தி எளிதில் கிடைக்கும். ஆகவே சுயநல முத்தித் தன்மையை விட்டு விடு. அதுவே நீ நன்மையடைவதற்குச் சிறந்த சாதனமாகும்" என்பதும் உங்கள் ஆஸ்திகராகிய விவேகானந்தர் வாக்கு.

தனது நன்மையை நாடாமல் உலக நன்மையை நாடி உழைக்கவேண்டியதே மனிதனுடைய கடமையென்பதை விவேகானந்தர் ஒப்புக்கொண்டு விட்டார். இதிலிருந்து மனிதனுக்குச் சுயநல எண்ணத்தை உண்டாக்கக் கூடிய எவையும் வெறுத்து ஒதுக்கத்தக்கவை என்பதையும் ஒப்புக்கொண்டவராகிறார் மதமோ, சாஸ்திரங்களோ, குருக்கள் மார்களின் கட்டுப்பாடோ உபதேசங்களோ, சுயநல ஆசையை உண்டாக்கக்கூடியவையானால், மனிதனைப்பரோபகார வாழ்வில் செலுத்துவதற்குத்தடை செய்வதாக இருக்குமானால் அவைகளை எல்லாம் அழிக்கவேண்டும் என்பதில் ஒரு குற்றமும் இல்லை.

மனிதனுக்குச் சுயநலத்தை உண்டாக்குவது மதம் என்று பகுத்தறிவு வாதிகள் கூறுகின்றார்கள். இந்த வுண்மை விவேகானந்தருக்குத் தெரியாததல்ல. ஆனால் அவர் "பிறர் நன்மைக்கு உழைக்குமாறுதான் இந்துமதம் கூறுகிறது. அதன் வேதங்களும் உபநிதங்களும் கோஷிக்கின்றன" என்று மேல்நாடுகளிலும் நமது நாட்டிலும் பிரசாரம் புரிந்தார், இந்த வகையில் இந்துமதத்திற்கு ஒரு புது மெருகு கொடுத்து அதைப் பிரகாசிக்கும்படி செய்ய முயற்சித்தார் என்று தான் சொல்ல வேண்டும். விவேகானந்தர் செய்த வியாக்கியானம் இந்துமதத்தில் மூலை முடுக்குகளில் இருந்தாலும் பெரும்பாலும் மக்க

ளைப்பிரித்துவைத்துக் கொடுமைப்படுத்தும் உபதேசங்களே நிறைந்துகிடக்கின்றன. அவையே தான் மதவாதிகளின் அனுபவத்தில் நடக்கின்றன. அதனால் தான் விவேகானந்தர் கூறிய மொழிகளும் இன்றுசெயலளவில் விவேகாநந்தரின் பக்தகோடிகளாலும் கூட அநுஷ்டிக்கப்படாமல் போயிற்று.

ஆகவே மதத்தை வைத்துக்கொண்டு எந்தச் சீர்திருத்தமும் செய்ய முடியாது என்ற உண்மையை உணர்ந்து தான் அதை அழிக்க வேண்டுமென்று பகுத்தறிவுக்காரர்கள் கூறுகிறார்கள்.

"எனது தாய்நாட்டில் ஒரு நாயும் கூடப்பட்டினி கிடக்க நான் பொறுக்கமாட்டேன். அதற்கு உணவு கொடுத்துக் காப்பாற்றுவதே எனது மதம். அதைத்தவிர மற்றவையெல்லாப் மூடமதம். வேஷதாரிகள் நடிக்கும் மதம்" என்பதும் விவேகாநந்தர் மொழியாகும்.

இதை இன்று எந்த மதத்தினர் தம்மனத்தில் அறிந்து நடைமுறையில் கையாளுகின்றனர்? இன்று எந்த மதத்தில் பிச்சைக்காரர்கள் இல்லாமல் இருக்கிறார்கள்? எந்த மதத்தில் பட்டினிக்கிடவாத மக்கள் இருக்கிறார்கள்? எல்லா மதங்களிலும், பிச்சைக்காரர்களும், பட்டினி கிடப்போரும் இருக்கும்போது அந்த மதங்களையெல்லாம் உண்மையான மதங்கள் என்று பகுத்தறிவு வாதிகள் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? அவைகளை யெல்லாம் வேஷ மதங்கள் என்று சொன்னால் அதில் குற்றம் என்ன?

இந்த வேஷ மதங்களைக் கட்டிக் கொண்டு அழுவதில் என்ன பிரயோஜனம்? நாம் சொல்லுகின்ற ஒன்றை மனப்பூர்வமாகச்சொல்லவேண்டும். சொல்லியதையும் வாய்ப்பேச்சளவில் விட்டுவிடாமல் செய்கையில நடத்திக் காட்டவேண்டும். இதுவே உண்மையான மனிதத்தன்மையின் செய்கையாகும். இப்படியில்லாமல், உண்மையா பொய்யா என்று நம்மால் அறிந்து கொள்ள முடியாததன்மைகளைப்பிறர்சொல்லக்கேட்டோ அல்லது புத்தகத்தில் படித்தோ, அவற்றை வாயினால் பேசிக் கொண்டிருப்பதும் பேசிக்கொண்டிருக்கும் அவைகளில் ஒரு சிறு பகுதியையாவது செய்வதற்கு மனமில்லாமலிருப்பதும், சொல்லுவதற்கு மாறாகவே தன்னுடைய நன்மைக்குத்தகுந்த சுயநலக் காரியங்களை நடத்திக்கொண்டிருப்பதுமே இன்று மதமாக இருந்துகொண்டிருக்கின்றது. இதை நாம் ஒவ்வொரு

நாளும் கண்களால் பார்த்துக்கொண்டும், காதுகளால் கேட்டுக் கொண்டும்தான் வருகிறோம்.

"வீணாக வாய்ச்சொல் வீரர்களாக மாத்திரம் இருக்க வேண்டாம்" என்ற விவேகாநந்தர் சொல்லையே திருப்பி திருப்பிக்கூறவே விரும்புகின்றேன். இதையே பகுத்தறிவு இயக்கமும் நீங்கள் மறக்காமல் இருக்கும்படி அடிக்கடி நினை ஆட்டுகிறது.

"பகுத்தறிவுக்காரர் சொல்லுவதைத்தான் எங்கள் மதம் சொல்லுகிறது; எங்கள் வேதம் சொல்லுகிறது; எங்கள் குரு மார்கள் சொல்லுகிறார்கள்" என்று வீண்வாய் வீச்சு வீசாதிர் கள்; இவ்வார்த்தைகளால் பாமர மக்களை ஏமாற்றி மதப்படு குழியில் தள்ளி அவர்களுடைய அறிவுக்கண்களைக்குத்திக்குரு டாக்காதீர்கள்! உங்களுடைய மதமோ, வேதமோ, குருமார்க ளோ பரோபகாரந்தான் மதம் என்று சொல்லுவார்களானால் அந்தப்படி முன்வந்து செய்து காட்டுங்கள்! அப்பொழுது உங்களோடு பகுத்தறிவுக்காரர்கள் ஒத்துழைப்பார்கள்.

"எந்தக்காலத்திலும் எவராலும் மாற்றப்படாதது தான் மதம்" என்று பகுத்தறிவுக்குச் சிறிது கூட சம்பந்தமில்லா மல் சொல்லிக்கொண்டிருக்கின்ற உங்களைப்போன்ற முரட்டுப் பிடிவாதக் காரர்கள் அல்லர் பகுத்தறிவுக்காரர்கள். "காலதேச வர்த்தமானங்களுக்கேற்ற காரியங்களைச் செய்து ஜன சமூ கத்தை ஒன்றுபடுத்தி இன்பகரமான வாழ்க்கையை ஜன சமூ கத்தில் நிலைத்திருக்கச் செய்யவேண்டும்" என்னும் நோக்கம் உடையவர்களே பகுத்தறிவுக்காரர்கள். ஆதலால் சொல்லு கிறபடி நீங்கள் செய்யுங்கள்!

கடவுள் தங்களுக்கு நன்மை செய்ததற்காக நன்றி செலுத்த வேண்டும் என்று சிலர் சொல்லுவதானால், கடவுள் பலருக்குத் தீமை செய்ததற்காக தீமையை அநு பவிப்பவர்கள் கடவுளை என்ன செய்ய வேண்டும்?

ஈ. வெ. ராமசாமி,

செட்டிநாட்டில் சீர்திருத்தப் புரட்சி.

1935ஆம் ஜூலை மீ 8உ, யுவ ஆனி மாதம் 24உ
திங்கட் கிழமை மாலை 5.30 மணிக்கு கானாடு
காத்தான் தோழர் வயி. சு. சண்முகம்
அவர்களின் [illegible] மாளிகையில் தோழர்
ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில்
கீழ்க்கண்ட தம்பதிகள் [illegible] தங்கள்
[illegible]
[illegible]
[illegible] உறுதி [illegible]
[illegible]
[illegible]
[illegible] கையொப்பம்
[illegible].

1. காரைக்குடி [illegible]
ந. மெய்யம்மை

2. கானாடு - [illegible]
நா. அளகம்மை

3. காரைக்குடி — ராம சுப்பையா
சுப. விசாலாட்சி.

4. கானாடுகாத்தான். S. [illegible]
சோ. அளகம்மை.

கானாடுகாத்தான்
8.7.35

[illegible]
President.

ஏழ்மைக் கிரங்கல்.

R. V. பொன்னம்பலம், புதுவை.

(ஸ்ரீ சிவ சண்முக வேலனே என்ற மெட்டு.)

ஆசைக்குகந்த என் தேவியே
ஆ! இதைக் கேளாய் சஞ் சீவியே
பாசமுடன் என தாவியே
பதைக்குது சொல்லுவேன் கூவியே

நாட்டில் தொழிலின்றி வாடுவார்
நல்ல விழாவும் கொண் டாடுவார்
சேட்டைப் புரோகிதர் கூடுவார்
செய்வீர் விழாவென ஆடுவார்!

சொந்தப் பகுத்தறி வின்றியே
சொல்வ தெல்லாம் இவர் நம்பியே
சிந்தை இழப்பதேன் விந்தையே
ஜெகத்திலிது பெரும் நிந்தையே!

பால் குளிக்கத் தெய்வம் ஏங்குமே?
பஞ்சணையில் நிதம் தூங்குமோ?
காலை விழிக்குமாம் பாங்கியே!
கற்றோர் நகைக்கின்றார் ஓங்கியே!

வசித்திட மக்களுக் கிடமில்லை
வஞ்சியே ஏழைகள் படுந்தொல்லை
நிசத்தினில் கூறநா வெழவில்லை
நெஞ்சு வற்றித்திறப்பார்கள் பல்லை

கற்சிலைகளுக்குக் கோவில்கள்
கட்டப் பணந்தரும் பாவிகள்
தற்புகழ்ச்சி தனில் மோகமோ?
சஞ்சலம் இங்கிதிற் போகுமோ?

கல்வியி லப்பொருள் செலவிட்டுக்
காட்டினால் ஒற்றுமை பலப்பட்டு
வெல்வோம எதையும் ஓர் மனப்பட்டு
வீண்செயலால் வரும் பெருஞ்சொட்டு

அன்றே ஒழியும் மூடப் பழக்கம்
அன்னமே சாகும் ஆதி வழக்கம்
என்றும் முழங்குமே அம்முழக்கம்
ஏந்திழையே உல கந்தழைக்கும்

மண்ணில் சுயமரி யாதையே
மார்க்க முரைக்கும் நற் பாதையே
எண்ணில் பொன்னம்பலம் ஓதியே
எங்கும் உரைத்தனன் நீதியே (ஆசை)

———)o(———

அதிக மதப்பற்றுள்ளவர்கள் இகழ்ச்சிக்கும், யோக்கியமற்ற தன்மைக்கும் கருவியாக அம்மதப்பற்று உபயோகமாகும்படி நடந்துகொள்ளுகிறார்கள்; சந்தேகிக்க முடியாத அவ்வளவு நேர்மையுள்ளவர்களாயிருந்தாலும் சமூக விரோதிகளாகவும், துற்பாக்கியமுள்ளவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்.

"லேண்டர்."

செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார் பித்த மனிதர்; அவர் சொல்லும் சாத்திரம் பேயுரையாம் என்றிங் கூதேடா சங்கம்.

பாரதியார்.

தலைகீழ்.

S. லக்ஷ்மிரதன் பாரதி, M. A., B. L.,

"மனிதன் சுதந்திரமுடையவனாகப்பிறக்கிறான், ஆனால் அவன் எங்கணும் அடிமைத்தளைகளில் பிணியுண்டு கிடக்கிறான்." "Man is born free, but every where he is in chains" என்றார் ரூசோ (Rousseau) என்ற ஆசிரியர். மக்களுக்குச் சுதந்திரம் இயற்கையானது, தலையாயது; அடிமைத்தனம் விரோதமானது, கீழானது. என்றாலும், மேற்கூறிய ஆசிரியர் கூற்றிற்கிணங்க எங்கணும் அதினும் சிறப்பாக நமது நாட்டில், அடிமைத்தனம் தலையாயும், சுதந்திரம் கீழாயும் காண்கிறோம்.

இதுவே "தலைகீழ்" என்பதாகும்.

எனினும் நமது நாட்டை தெய்வீக நாடென்றும், புண்ணிய பூமியென்றும் வாழ்த்திப் புகழ்கின்றோம். இதற்கு, சுதந்திரம் மிளிரும் பிறநாடுகளை "இன்னல்கள் பெருகிடும் மிலேச்சர்" நாடென்றும், பாவபூமியென்றும் இகழ்ந்து நகையாடுகின்றோம். இது தலைகீழ்ப் பாடமாகும். வாய்வீச்சுத்தான் மிச்சம். தலை போச்சு என்ற பேச்சுக்கும் வசைக்கும் ஆளாவதாகும்.

என்ன உளருகிறீர், பார்த்துப்பேசும், என்ற குரல் கேட்கிறது.

சரி, உச்சி முதல் உள்ளங்கால் வரை கூர்ந்து கவனிப்போம். நான் என்ன செய்வது? மனிதர் உச்சிக்கீழாக பாதம் மேலாகவல்லவோ தெரிகிறார்கள். ஆனால், என்ன, நாமும் தலைகீழாக (ஆதியிலிருந்து) பார்த்தால் சரியாய் போகிறது. இப்பொழுது என்ன அதிசயம். மனிதன் திரும்பவும் தலை மேலாகவும், கால் கீழாகவும் காணப்படுகிறான். இந்த நிலையிலிருந்தே இவர்களை ஆராய்வோம்.

மக்கள் நாகரீகம் முதிராத காலம் (ஞாபகம் தலைகீழ் ஆகையால் அநாகரீகம்) உள்ளதை உள்ளவாறும், கண்டதைக்

கண்டவாறும், சொல்லும் காலம். அறியாமை, பயம் இவை ஆயிரம் கதைகளையும் கற்பனைகளையும் சிருஷ்டித்த காலம்.

இத்தகைய மக்களுடைய சிருஷ்டிப்பொருள்களே, தெய்வங்களும், வேதமும் ஆகும். இது உண்மை, தலையைத்தலையாகவே காணுவதாகும்.

நாட்கள் பல பல, வருடங்கள் பல, நூற்றாண்டுகள் சில சில கழிந்தன. மக்கள் படைத்த கடவுளரே சகலத்தையும் படைத்த பிதாவாக மாறுகிறார். பரம்பரையாக மக்கள் வாக்கில் வளர்ந்த வாக்கியங்களோ, கடவுள் காட்டிய வேதங்களாயின. இனி என்ன! மனிதனுக்கு வேலையில்லை. (Full Stop) அவன் (கடவுள்) இன்றி ஓர் அணுவும் அசையாது. எல்லாம் தலைவிதி அவரது செயல். மனிதன் அறிவுக்கு வளர்ச்சியில்லை, தேவையில்லை, வேதங்களிற் காணாத உண்மையில்லை விஷயமில்லை, தலையில் அறிவில்லை. காலில் நடமாட்டமில்லை.

ஏன்?

தலைகீழ்.

இந்தியர்கள் பூர்வீகக கலை வளர்ச்சி என்ன சாஸ்திரங்கள் என்ன, உபநிடதங்களென்ன, அரும்பெரும் ஆராய்ச்சிகளென்ன? ஆகவேஇது வெறும் பழிச்சொல்லேனலாம். இதற்குத்தான் தலைகீழாயிருப்பதை தலைகீழாகவே பார்த்துவரவேண்டுமென்பது. உள்ளங்கால் உயரஊசலாடுவதைக் கடைசியில் காணலாமே. ஏன் அவசரம்.

மக்கள் இப்பரம்பரையாகப் பாடம் படித்து வந்த வாக்கியங்களிலேயே தாம் கண்டறியும் உலக விஷயங்கள் அனைத்தையும் காணவேண்டியதாயிருந்தது. என்ன செய்வார்கள், எல்லாம் வேதத்தில் உள்ளது. அறிவைச் செலுத்தினால் அனைத்தும் காணலாம் என்ற ஒரு கற்பனை (Fiction) செய்துகொண்டனர்.

உடனே வேதங்களை விச்வ ரூபமாக்கத் தங்கள் அறிவனைத்தையும் செலவிட்டனர். தலை வளர ஆரம்பித்தது. ஒவ்வொரு உருப்பாய் வளர்ந்துகொண்டே வந்தது. எத்தனை வேதங்கள், வேதாங்கங்கள், வேதாந்தங்கள், உபநிடதங்கள் என்ன அழகு! எத்

துணை சிறப்பு! ஆனால் வயிற்றுக்கு வந்தது, வலியும் வந்து விட்டது பாவம் ஒருசோற்று மூட்டையை எத்தனைபே ருக்கு எத்தனை நாள் பங்கிடலாம்?

ஏசு கிறிஸ்து நாதர் ஒரு சில மீன்களை ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தபின்னரும், கூடை கூடையாக மீதமிருந்ததாம். ஆனால் மனிதருக்கு அது சாத்தியமா? ஒரு சில வாக்கியங் களை எத்தனையெத்தனை விதத்தில் நீட்டியும், மாற்றியும், விரித்தும், திரித்தும், புனைந்து உரை செய்து வளர்த்துக் கொண்டேபோகலாம் எனில் வளர்ச்சிக்கு இடமில்லை, ஆதா ரமில்லை தளர்ச்சி ஆரம்பித்தது. கடைசியில் குறுகிய கால்கள்தான் மிச்சம். தலைகீழ் பாடம் சரியாய் தலையில் பிடித்து வாலில், இல்லை, காலில் முடிந்தது.

ஆனால் உரோமர்கள் (Romans) செய்துகொண்ட கற் பனை (Fiction) அவர்களுக்கு இதனின்றும் வெற்றியளித் தது. அவர்கள் "ஒரு பூர்ணமான நீதி நிலை" (Natur Recht) ஒரு காலத்திலிருந்தது, கண்ணுக்கெட்டாத காலத் திலேயே அது அழிந்துபோய்விட்டது எனக்கற்பனை செய்து கொண்டார்கள். அது வேதங்களென்ற வாய்வழியாக வளர் ந்து வறையறுக்கப்பட்ட வாக்கியங்கள் போன்றதல்ல. அத னைக் கண்டவர் கேட்டவர் யாருமிலர். எனவே அதைக் கண்டுபிடிப்பதே தம் கடனாக கொண்டார்.

"தொட்டனைத்தூறும் மணற்கேணிமாந்தர்க்கு கற்றனை த்தூறுமறிவு" என்றாற்போல், ஒரு பூரணமான, நீதியான நிலை மையை யாதொரு கட்டுப்பாடும் வரையறைவுமின்றி, துருவித் துருவி ஆராய்ந்து தெளிய முற்பட்டனர். என்றும் குறையே கண்டனர். குறைவ்ய நீக்குவான் மீண்டுமீண்டும் முயன்றனர், எனவே அவர்கள் கலை, மலைபோல் வளர்ந்துகொண்டே போயது உலகம் போற்றும் தலைமை ஒரு கால் எய்தி அழி யாப் புகழ் கொண்டனர்.

மக்கள், நாளாக, நாளாக பல்வேறு தொழில்கள் இயற்று வாராயினர். தொழில் ஒற்றுமைப்பட்ட பல்வேறு குழுவினர் தம்முள் நெருங்கி உறவாடிப்பழகும் நேர்மைபற்றி கொல்லர், தச்சர், வாணியர், வக்கீல்கள் எனறாற்போல பல, பல வகுப் பினரென (Classes) ப்பிரித்தனர்.

கிலையற்று, தொழில்பற்றி மட்டும் தோன்றி மறையும் வகுப்பு வேற்றுமை கண்டு மயங்கி அதைப்பெரிதாகப் பேணிய பேதைகள் சிலர் இவ்வேற்றுமையே நன்றெனக்கொண்டு, இவ் வகுப்புகளைக் காரணமாகக்கொண்டு, தொழில்களை என்றென்றும் பணிக்கலாயினர்.

தொழில் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் அவனன் அறிவும் திறனுமே இருப்பிடம் என்பதை மறந்து வகுப்புகளே உறைவிடமாகத் தீர்மானித்து, "தொழி நலிவுறாமை வேண்டின் வகுப்புகள் சிதைவுறாமை வேண்டும்" எனக்கொண்டு கலப்பு மணம் செய்யாமை, சமபந்தி போஜனம் செய்யாமை, தீண்டாமை, பாராமை போன்ற இன்னோரன்ன விலக்குகளை (Taboos) ப்புகுத்தி வகுப்புகளையும் (Classes) இறக்கொணா வருணங்களென (Castes) வகுத்தனர்.

"தொழில்பற்றி ஆகும் வகுப்புகள்-ஆனால் பிறப்புஎவ்வுயிர்க்கும் ஒக்கும்" என்றனர்மேலோர்.

ஆனால் இவர்களோ—எதிலும் தலைகீழ் "பிறப்பொவ்வா—வருணங்கள் வேறு வேறு"—"அவற்றையொட்டித் தொழில்களும் ஆம்" என்றனர். இதுதான் வண்டியைக்கொண்டுபோய் குதிரைக்கு முன்னால் கட்டுவது. "Putting the cart before the horse" என்று ஆங்கிலத்தில் சொல்லுவது.

மற்றும் தொழில்கள் பற்றி வேற்றுமைகள் எழுகின்றன. "சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்."

பிறப்பினால்உயர்வு தாழ்வு சொல்லல், பாவம் என்கிறோம்.

இதிலும் தலைகீழ் பாடம் இன்று படிக்கிறார்கள். பிறப்பினால் வேற்றுமை உண்டு. யார், யார் யாது, யாது தொழில் புரியினும் சிறப்பு ஒன்றே. தொழில்பற்றி உயர்வு தாழ்வு சொல்லல்தான் பாவம், என்று மாற்றிச் சொல்லுகிறார்கள்.

யார்?

பெரிய பெரிய மகாத்மாக்கள் முதல் சொல்லுகிறார்கள். அப்பொழுது நமது தலையே மேலேதான் இருக்கிறதா என்று நமக்கே சந்தேகமுண்டாய் விடுகிறது.

எனது காதில், போதும் போதும் நிறுத்தும் தலை சுற்றுகிறது என்ற சப்தம் கேட்கிறது. இல்லை பயப்படாதீர்கள் இன்னும் ஒன்றிரண்டு தலைகீழ் தினுசுகள் (Sampls). அப்புறம் பிதற்றல்கள் நின்றுவிடும். தலைகிறு கிறுப்பும் போய்விடலாம்.

பின்! ஒரே துக்கம்!—யாருக்கு?! எனக்குத்தான்.

மணம்.

மணம் மலர் பொருந்தும் மணமன்று! மனவிருப்ப மணம். அதுதான் காதற் கலியாணமென்பது. ஆணும் பெண்ணும் ஆசையுற்றுக் கலப்பது இயற்கை. மனதொத்து நிலையாக வாழ்வது காதற்சிறப்பு. அதனை உலகினர் அறிந்துகொள்ளுவதற்காக முடிப்பது மணவினை.

ஆண் பெண் உறவு, ஆசையில் ஆரம்பித்து மணவினையில்முடிவது இயற்கை.—ஒழுங்கு.

ஆனால் இதிலும் தலைகீழ்.

ஆண்பெண் உறவினை, ஆசையென்பதின்னதென்று கூட தெரியாத பாலர்கள் மணவினையில் ஆரம்பிக்க வேண்டுமாம்.

ஏன்?

அது கடவுளர் தம் தெய்வத்தால் பணிக்கப்பட்ட சடங்காம். (Marriage is a Sacrament) இச்சடங்கினுக்குள் படுத்தபட்ட ஈருடல் ஈருயிர்கள், அவைகள் தம்தமக்குள் எத்துணை வேறுபாடுடைத்தாயினும் இவ்வுலகில் ஒன்றி வாழ வேண்டும். அன்பும் ஆசையும் காதலும் அடையவும் வேண்டுமாம். கல்லைக்கொடுப்பார்களாம், நன்றாகச்சமைக்க வேண்டும், உண்ணவும்வேண்டும், உண்டால் அது ஜீரணிக்கவும் வேண்டும். வாஸ்தவம் இது மக்கள் வழியன்று தெய்வீக அல்லது பைசாச மணமேயாகும்.

விதவையர்.

கொண்ட கணவரது சொத்துக்களை அவர் இறந்தபின் அடைந்த விதவையர் எவ்வளவு பகிரங்கமாக விபசாரதனத்தில் ஈடுபட்டாலும் அவர்களுக்கு அச்சொத்துக்களிலுள்ள உறிமைகள் ஒரு சிறிதும் குறைவதில்லை. ஆனால் அவர்கள் மறுமணம் செய்துகொண்டாலோ சொத்துக்கள் அனைத்தையும் இழந்து விடுகின்றனர்.

விதவைகளின் விபசார தனத்திற்கு இத்தனை தூண்டு தலா!

ஆனால் மணவினைச்சடங்கொன்றே, மனைவியாம் பெற்றியை தருமெனக்கொள்வோர், மறுமணச் சடங்கொன்றே அதனைப்போக்குமென்று கொள்வதில் வியப்பொன்றுமில்லை.

தனயர்களின் சொத்துக்களை தாய்மார்கள் வாரீசாக அடைந்துகொள்வதில் அவர்கள் (1) விதவை தன்மையோ, (2) விபசாரத்தன்மையோ, (3) அச்சொத்துக்களை அடைந்த பின்னோ முன்னோ மறுமணம் செய்துகொள்வதோ, எவ்விதமும் பாதிப்பதில்லை.

ஆனால் விதவையர்க்கு மறுமண உறிமையை கொடுத்து அவருடைய துயரம் துடைக்க வந்த மறுமணச்சட்டமோ (The Hindu Widows Remarriage Act) புருடனை இழந்த தாய்மார்கள் தம்மக்களின் சொத்துக்களை அடைந்த பின்னர் மறுமணம் செய்துகொண்டால் அந்த நிமிடத்திலேயே சொத்துக்களை இழந்து விடுவார்கள்என்று கட்டளையிடுகிறது.

ஆனால் சொத்துக்களை அவ்விதம் அடையும் முன்னரே, விதவைத்தாய்கள் மறுமணம்செய்துகொண்டிருந்தால் மக்களின் சொத்துக்களை வாரீசாக அடைந்து கொள்வதில் எவ்வித தடையுமின்றி இன்றும் அடைந்து வருகிறார்கள்.

விதவைகளை முன்னேற்ற வந்த போலி முற்போக்கர்கள் புதிதாகச்சில தளைகளைப்புனைந்து விதவைகளுடைய விலங்குகளைப் பலப்படுத்தினர். இது அன்னார் தம்பிற்போக்கன்றி வேறென்ன.

அப்பப்பா! என்ன கொடுமை! என்ன கூற்று! என்ன புரட்சி! எல்லாம் தலைகீழ். இந்த உலகம் வேண்டவே வேண்டாம். கயிற்றை சுருக்கு போட்டு இறந்துவிடலாமென்றால் தலைகீழ் உலகமாயிற்றே!

மற்றொரு பெரிய புரட்சி! ஒரு பெரிய பூகம்பம் வேண்டும்.

எதற்கு? உலக அழிவுக்கா?

இல்லை. இல்லை. தலை கீழ் உலகத்தை தலைமேலாக்கி அறிவும், அன்பும், மீண்டும்உலகில் நிலைபெறுவதற்கு

———)o(———

பாவம் செய்ய லைசென்ஸ்.

சோதனை விளக்கு.

"மக்கள் பாவகர்மங்கள் என்று சொல்லப்படும் துஷ்க்கிருத்தியங்களாகிய கொலை, களவு, பொய், விபசாரம், ஹிம்சை முதலிய காரியங்கள் செய்யக்கூடாது என்பதற்கும், செய்யப்பயப்படவேண்டும் என்பதற்கு மாகவே கடவுள் உணர்ச்சியும், மதமும், மதநூல்களான வேதம், புராணம், சாஸ்திரம் என்பவைகளும் மற்றும் பலசமய நூல்களும் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன" என்பது மதவாதிகள், ஆஸ்திகர்கள், பண்டிதர்கள், புராணக் காலச்சேபக்காரர்கள் ஆகியவர்களின் கூற்றாகும்.

ஆனால் இந்தக் கூற்றானது அறிவில்லாதவர்களும், காட்டுமிராண்டித்தனமான பிராயமுடையவர்களும் எவ்வித கெடுதியோ பாதகமோ செய்ய சக்தி அற்றவர்களுமான மக்களுக்குத்தான் ஏதாவது சிறிது பயன்படலாமே ஒழிய மற்றபடி சாதாரண மனித சமூகத்துக்கு ஒரு சிறிதும் பயன்படாததோடு சக்தியும், சௌகரியமும் உள்ள அளவுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு பாவங்களையும், பாதகங்களையும் கெடுதிகளையும், இம்சைகளையும் மற்ற மக்களுக்கு செய்யும்படியாக தூண்டக்கூடியதாகவே இருந்து வருகின்றது.

கடவுள் உணர்ச்சி சாஸ்திரம், புராணம் முதலியவையானது மனிதனை பாவம் செய்யாமல் இருப்பதற்கு பதிலாக பாவம் செய்யும்படியான தைரியமும், துணிவும் கொடுக்கும்படியாக இருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கலாம்.

நமது புராணங்களும், கடவுள் தன்மைகளும் பக்தியின் லக்ஷணங்களும் கடவுள் பாவம் செய்தவர்களை தண்டிக்கும் என்பதைவிட பாவம் செய்தவர்களை மன்னிக்கும் என்பதையே மிகுதியும் வலியுறுத்திக் கூறுகின்றன.

அப்படிப்பட்ட மன்னிப்புகளும்கூட பாவமான காரியங்கள் செய்வதற்காக எடுத்துக்கொள்ளவேண்டிய சிரமத்தை

விட வெகு சுலபத்தில் கிடைத்துவிடும்படியான மாதிரியி லேயே கூறுகின்றன.

விபூதி.

உதாரணமாக விபூதி மகிமையைப்பற்றி சிவபெருமான் சொன்னதாக சொல்லப்பட்ட புராணத்தை சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

பிரமோத்திர காண்டம் என்பது சைவ சமயநூல் ஆகும், அதில் மக்களின் பாவ விமோசனத்துக்கான சாதனங்களே பெரிதும் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தில் உள்ள விஷயங்கள் பெரிதும் பரமசிவன் என்னும் கடவுளால் பார்வதி முதலியவர்களுக்குச் சொன்னதாகவும் அதுவே வேதத்தின் சாரமெனவும வியாச ரிஷியாலும், சூத முனிவராலும் மக்கள் அறியும்படி செய்யப்பட்டதெனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

அதில் திரி புண்டர அத்தியாயத்தில் விபூதி பூசுவதால் எப்படிப்பட்ட பாவங்கள் எல்லாம் தொலையும்.மன்னிக்கப்படும்,என்பதை விளக்குகிறது.

அதாவது, ஷை அத்தியாயம் 33, 34-வது பாட்டுகள்.

பலத்தின்பெருமைமாமுனியேபகரிலேவர்தாமறிவார்
நிலத்தினமீதுமானிடர்க்குமுத்திக்கிதுபோனெறியுண்டோ
சொலற்குத்தகுநாலவருணத்தோர்வருணாச்சிரமத்மதொழில்
புரிவோர்
கலத்திற்கியையாவிழிகுலத்தோர்கலன்பூண்மகளீர்கைமை
யுற்றோர்.

இயாவரேனுமித்தருமமியன்றகலத்தியற்றுவரேற்
பாவமாயத்தனையறுத்துப்பாரிற்பிறவிக்கடனீந்தித்
தேவர்போகம்பொன்னுலகிற்சென்றுதுய்த்துச்சிவனருளை
நாவினாலும்வழுத்தரியமுத்தியின்பநண்ணுவரால்.

இதன் கருத்து:— விபூதியை அணிவதால் வரும் பயன் என்னவென்றால் அது நான்கு வருணத்தார்களும், நான்கு ஆச்சிரமக்காரர்களும் இழிகுல மக்களும் ஸ்திரீகளும் கைம் பெண்களும் ஆகியவர்கள் எவர்களாய் இருந்தாலும் விபூதியை நெற்றியில் மூன்று விரலகலமாகப் பூசிக்கொள்ளுவார்

களேயாகில், சகல பாவங்களும் மன்னிக்கப்பட்டு சுவர்க்க லோகத்தில் தேவபோகத்துடன் பரமசிவனிடமே இருக்கும்படியான முக்தி பெருவார்கள் என்பதாகும்.

பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதில் என்ன என்ன மாதிரியான பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதைப்பற்றி சொல்லுவதாவது.

35, 36, 37, 38, 39, 40-வது பாட்டுகள்.

கோறல்களவுகள்ளுண்டல்குருவைப்பிழைத்தல்கூட்டென்னத்
தேறும்பஞ்சபாதகத்தையொழியாதியற்றுஞ்சிறியோரு
மாறிலொன்றுதாரங்கொள்ளாதநீதியியற்றியறமிகுந்த
பாறுபடிவேன்மன்னவரும்பயந்தோர்க்கொன்றபாதகரும்.

செய்தநன்றிமறந்தோருந்தீவைத்தில்லஞ்சிதைத்தோருங்
கொய்துபசுவைத்தின்றோருங்கொண்டோர்ப்பிழைத்துத்
திரிந்தோரு
நொய்திற்கரிபொய்த்துரைத்தோருநோன்பையிகழ்ந்து
[நொடித்தோரும்
வைதுபழித்துப்பொய்யென்றுமுன்னூலிகழ்ந்தவஞ்சகரும்.

கருப்பம்வீழ்த்தித்திரிந்தோருங்கலவாதவரைக்கலந்தாரும்
பரித்தவொருதேவனைவழுத்திப்பலதேவரையும்பழித்தோரு
மருத்திவிடத்தாற்கொன்றோருமற்றார்க்கறாதுவந்தோரும்
விருத்தர்பாலர்மடவார்கண்டுங்கவினைகள்செய்தோரும்.

அடைந்தோர்க்கருளாதிருந்தோருமமரிலரசன்படைவெருவி
யிடைந்துவெரிநிட்டோடினரும்வெறியகுறளைபகர்ந்தோரு
மிடைந்தவறியோர்க்கியாமனிநியமீட்டியிருந்தோருங்
குடைந்துநீருண்கூவல்குளங்குட்டஞ்சிதைத்தகொடியோரும்.

ஆராயங்களழித்தோருமதிதிவருந்தவயின்றோருந்
தீராவிடும்பைபகைவருக்குந்தவசீலருக்குஞ்செய்தோருஞ்
சேராகிலலையைச்சேர்ந்தொழுகித்தீவேட்டுண்ணுந்திறத்திறம்
பாராவாரங்கலத்தேறிநிதிவேட்டுழன்றபார்ப்பாரும். [பிட்

இன்னுங்கொடும்பாதகம்புரிந்தோரியாவரேனுமவரெல்லாம்
பின்னுஞ்சடிலமாமுனியேதிருநீறணியப்பெறிலிவர்பான்
மன்னும்பிறவிமுதல்வினைமுழுதுமாயும்வயங்கொளியோன்
மின்னுங்கனகவுதயவரைமேவவிருள்வீந்திடுவதுபோல்.

இப்பாட்டுகளின் கருத்துக்கள்:— கொலை செய்தல், திருடுதல், மதுபானம் செய்தல், குரு துரோகம் செய்தல், கொடுங்கோன்மை ஆக்ஷி செய்தல், மாதா பிதாக்களை கொல்லல், செய் நன்றி மறத்தல், வீடுகளுக்கு தீயிடுதல், பசு ஹத்தி செய்தல், பசு மாம்சம் சாப்பிடுதல், கணவனுக்கு துரோகம் செய்தல், பிர புருஷரைச் சேருதல், பொய் சாக்ஷி சொல்லுதல், சாஸ்திரங்களைப்பழித்தில், விரதங்களை இழித்தல், கருவழித்தல், கீழ்மக்களைச் சேருதல், விஷங்கொடுத்துக் கொல்லுதல், தர்மம் செய்யாதிருத்தல், பெண்களை பயப்படுத்தல், படையில் முதுகுகாட்டி ஓடுதல், கோள் சொல்தல், தப்பான வழியில் பொருள் சேர்த்தல், கிணறு, குளம், குட்டை ஆகியவைகளை கெடுத்தல் பூஞ்சோலையை அழித்தல், தபசிகளுக்கு உதவாமை, முனிவர்களுக்கு கெடுதி செய்தல், பிராமணன் கப்பலேருதல், பிராமணன் தன் தருமத்தைச் செய்யாதிருத்தல்,

ஆகிய இந்தப் பாதகங்களும் இன்னும் மற்றும் இதில் சொல்லப்படாத பாவங்களும் செய்திருந்தாலும் அவர்கள் எல்லோரும் நெற்றியில் விபூதியை அணியப் பெறுவார்களே யானால் அவர்களிடம் உள்ள பாவங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட இருட்டுபோல் தானாகவே ஒழிந்து போகும் என்பதாகும்.

மேலும்!

மேலும் விபூதியின் மகிமை இவ்வளவோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. இன்னும் மேலே போகிறது, அதாவது

41-வது பாட்டு.

எள்ளப்படுகீழ்மக்களெனுமிழிந்தகுலத்தோரென்றாலும்
வள்ளறபரமன்றிருநீறுமணியுமணிந்தமாண்பினரை
யுள்ளத்துள்ளேயிருபொழுதுமுணர்ந்துதெருண்டுசிவனென
கொள்ளத்தகையவறிவினரேபிறவிக்கடலிற்குளியாதார். [வே

இதன் கருத்தாவது பிறவியில் கீழ்மக்களாக இருந்தாலும் விபூதி அணிவார்களேயானால் அவர்கள் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் வைத்து பூஜிக்கப்படத்தக்கவர்களாவார்கள் என்பதாகும்.

இன்னும் மேலே!

விபூதியின் பெருமை இவ்வளவோடு நிற்கவில்லை. இன்னும் ஒரு அந்தஸ்து மேலே போகின்றது அது என்னவென்றால்,

42-வது பாட்டு

நாடிமூன்றுகாலமெண்ணானம்பன்றிருப்பேரிசைநவிலா
னாடிவிளங்கும்பாவையெனவறிவொன்றில்லானனனாலு
நேடிவெண்ணீற்றினிதன்னிநெற்றிவிளங்கத்தரிப்பானேற்
கோடிபிதிர்கள்கும்பியிடைகுளியாதரன்பாற்கூட்டுவனால்.

இதன் கருத்து சிவபெருமானை மனதினால் நினைக்காதவனாகவும், வாயினால் உச்சரிக்காதவனாகவும் இருப்பவனும், சிறிதும் அறிவில்லாத மரக்கட்டை போன்றவனாய் இருப்பவனும் விபூதியை நெற்றியில் அணிவானேயானால் அவன் மேதாவி ஆவதோடு அவனுடைய பிதுர்க்கள் எப்படிப்பட்ட நரகத்தில் இருந்தாலும் எத்தனை பேரானாலும் அதிலிருந்து மீண்டு சிவபெருமான் பாதத்தை அடைவார்கள் என்பதாகும்.

இன் னும் இன் னும் மேலே!

விபூதியின் மகிமை இவ்வளவோடு கூட நின்று விடவில்லை. இன் னும் இன் னும் ஒரு அந்தஸ்துக்கு மேலேபோகின்றது. அது என்னவென்றால்

43-வது பாட்டு.

ஏழுகோடிமந்திரமுமெண்ணிறவமுமிருநிலத்தி
லாழமுடையகங்கைமுதலனந்தநதியுமமரேசன்
வீழுந்துரகமீறாமவ்வேள்வியனைத்தும்விளம்புங்காற்
றாழுஞ்சடையானறிருநீறுதரும்பேறோன்றுந்தாராவே.

இதன் கருத்தாவது எப்படிப்பட்ட மந்திரங்களுக்கும் எப்படிப்பட்ட புண்ணிய ஸ்தலங்களுக்கும், கங்கை முதலிய எப்படிப்பட்ட நதிகளுக்கும், எப்படிப்பட்ட யாகங்களுக்கும், விபூதி பூசுவதால் பரமசிவன் அருளும்பேற்றில் ஒன்றுகூட அடைய முடியாது என்பதாகும்.

இது யார் சொன்னது? தெருவில் போகிறவர்கள் சொன்னதல்ல. மற்று யார் என்றால்,

45-வது பாட்டு.

இந்தவிபூதிமான்மியத்தைவேதம்பலவுமியம்புமதைச்
சிந்தைக்கெளிதாய்மிகச்சுருக்கிச்செப்பினோமென்றருள்புரியா
வந்தத்துடனேமூதலுமில்லாவாதிபரமனகன்றிடனுஞ்
சந்தக்குலனான்மறைவிரிஞ்சனுலகத்தடைந்தான்சனற்குமரன்.

இதன் கருத்தாவது "இந்தப்படியான விபூதியின் மகத்து வம் வேதங்களில சொல்லப்பட்டதாகும், என்றாலும் எளியவர்க்கும் விளங்கும்படியாக நாம் சொல்லுகிறோம்" என்று கைலாசபதியாகிய சிவபெருமான் சொன்னார் என்பதாகும்.

ஒரு சிடிகை.

ஆகவே ஒரு சிடிகை விபூதி எடுத்து நெற்றியில் குறுக்கு வசமாகப் பூசிக்கொண்டவுடன் எவ்வளவு கீழ்மக்களானாலும் எவ்வளவு மடையனானாலும், எவ்வளவு அயோக்கியனானானாலும், எப்படிப்பட்ட பாவங்கங்களை எல்லாம் செய்தவனானாலும் சகல இழிவும், சகல குறைவும், சகலபாவங்களும் நீங்கி அவர்கள்மாத்திரமல்லாமல் அவர்கள் பிதுர்க்களும், ஏற்கனவே நரகத்தில் விழுந்து அழுந்திக்கொண்டிருக்கிறவர்களும் எல்லோரும் மோக்ஷ லோகத்தை அடைந்துவிடுவார்கள் என்று வேதமும் சிவபெருமானும் சொன்னார்கள் என்றால்,

இனி இதற்கு அப்பீல் ஏது?

இனி மக்களுக்கு பாவங்கள் ஏது?

இனி எப்ப டிப்பட்டபாவத்தை யாராலும் செய்வதற்கு பயம் ஏது? தடை ஏது?

ஆகவே விபூதி பூசுவதென்பது பாவம் செய்வது, பாதகம் செய்வது மற்றும் உலகிலுள்ள கெட்ட காரியங்கள், இழி காரியங்கள் எல்லாம் செய்வது என்பதற்கு லைசென்சா இல்லையா என்று கேட்கின்றோம். விபூதி பூசிக்கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து நாம் சில சமயங்களில் பரிகாசம் செய்ததோடு அவர்களை மடையர்களென்றும் எண்ணினது உண்டு.

இப்போது அது சரியல்லவென்றே தோன்றுகின்றது. விபூதி பூசுகிறவர்கள் எல்லாம் மகா கெட்டிக்காரர்கள், தந்திரசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஏனெனில் பெரிய பெரிய பாதகங்களையும், பாவ காரியங்களையும் தாராளமாக செய்துவிட்டு அதற்காக குறிக்கப்

மூட நம்பிக்கை.

(சித்திரபுத்திரன் எழுதிவது.)

வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரம்.

—————)|(—————

நகை வியாபாரி:— ஐயா, தாங்கள் என்னிடம் காலையில் காசுமாலை வாங்கிவந்தீர்களே அது தங்களுக்குத் தேவையா இல்லையா என்பதைத்தெரிவித்துவிட்டால் அதை வேறு ஒருவர் வேண்டுமென்று சொல்லி மத்தியானமிருந்து கடையில் காத்துக்கொண்டிருக்கிறார். அவருக்காவது கொடுத்துவிடலாம் என்று வந்திருக்கின்றேன். எனக்குப் பணத்துக்கு மிகவும் அவசரமாயிருப்பதால் தயவு சய்து உடனே தெரிவித்துவிடுங்கள்.

வைதீகர்:— செட்டியாரே, அந்த நகை தேவையில்லை. வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வரும்போது பூனை குருக்கே போச்சுது, அப்பொழுதே வேண்டியதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். வீட்டில் பெண்டுகள் பார்த்து மிகவும் ஆசைப்பட்டு மாலையிலுள்ளக் காசை எண்ணிப்பார்த்தார்கள். அதில் 68-காசுகளிருந்தது. எட்டு எண்ணிக்கைக் கொண்டது எதுவும் எங்கள் குடும்பத்திற்கு ஆயிவருவதில்லை. அதனால் அவர்களும் உடனே கீழே போட்டுவிட்டார்கள். ஆனதினால் அது எங்களுக்கு வேண்டியதில்லை.

பட்ட பெரிய பெரிய தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ள சுலபமாக வழிகண்டுபிடித்த மகா புத்திசாலிகள் என்று எண்ணவேண்டியதாயிற்று.

அவ்வளவோடு மாத்திரமல்லாமல் வீபூதி அணிவது என்பது பஞ்சமா பாதகமுதல் பல பாதக காரியங்கள் செய்தவர்களை கண்டுபிடிக்கும் தர்மாமீட்டர் என்னும் அளவு கருவியாகவும் விளங்கிற்று.

ஆகவே உலகில் எவரும் பாவத்துக்கு அஞ்சவேண்டியதில்லை என்பதோடு ஒரு சிட்கி சாம்பலால் எல்லா பாவமும் மன்னிக்கப்பட்டு போகும் என்பதும் வேத வாக்கு ! சிவ பெருமான் வாக்கு !!

நகை வியாபாரி:— அப்படியனால், தயவு செய்து கொடுத்துவிடுங்கள். வேறு ஒருவர் காத்துக்கொண்டிருக்கின்றார்.

வைதீகர்:— ஆஹா, கொடுத்துவிடுவதில் அபேக்ஷணையில்லை. காலமே நேரத்தில் வாருங்கள் கொடுத்துவிடுகின்றேன்,

நகை வியாபாரி:— அவர் இன்று இராத்திரிக்கு ஊருக்குப் போகின்றவர். ஆனதால் தயவு செய்து இப்பொழுதே கொடுத்துவிடுங்கள்.

வைதீகர்:— செட்டியாரே, தாங்களென்ன நாஸ்திகராய் இருக்கின்றீர்கள். வெள்ளிக்கிழமை, அதுவும் விளக்கு வைத்த நேரம், இந்த சமயத்தில் நிறைந்த வீட்டிலிருந்து பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா? அது லக்ஷ்மி அல்லவா?

நகை வியாபாரி;— என்ன ஐயா, வியாபாரத்திற்காக பெண்டுகளுக்கு காட்டிவிட்டு கொணர்டுவருகிறேன் என்று எடுத்துக்கொண்டுவந்த நகையை வேறு ஒருவர் அவசரமாகக் கேட்கின்றார்கள் என்று வந்து கேட்டால், வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரம் என்கின்றீர்களே இது என்ன ஒழுங்கு ஊரார் நகைக்கு நாள் என்ன, நேரமென்ன என்பது எனக்கு விளங்கவில்லையே.

வைதீகர்:— (தனக்குள்ளாகவே இந்த இளவு நகையை நாம் ஏன் இந்த மனிதனிடம் வாங்கிவந்தோம்' என்று நினைத்துக்கொண்டு) என் புத்தியை விளக்குமாற்றால் புடைக்க வேண்டும். உம்ம கடைக்கு வந்ததே பிசகு, தவிரவும் உம்மிடம் நகையை எடுக்கும்போதே மணி பத்தரை இருக்கும். நல்ல ராகு காலத்தில் எடுத்துவந்தேன். அது எப்படியானாலும் கலகமாய்த்தான் தீரும், எனக்குப் புத்தி வந்தது. இனி இந்த மாதிரி செய்யமாட்டேன். தயவு செய்து நாளைக்கு வாருங்கள்.

நகை வியாபாரி:— இது என்ன ஐயா, தமாஷ் செய்கின்றீர்களா என்ன? உங்கள் நகையை யாராவது கேட்டால், நாள் கோள் எல்லாம் பார்த்துக்கொள்ளுங்கள். ஊரார் நகைக்கு இதையெல்லாம் பார்க்கச்சொல்லி உங்களுக்கெவன் புத்தி சொல்லிக்கொடுத்தான். அவனைக் கூட்டிக்கொண்டுவாருங்கள், அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கின்றேன். மரியாதையாய் நகையைக் கொடுங்கள் நேரமாகுது.

வைதீகன்:— நீங்கள் 'குடி அரசு' பத்திரிகை கக்ஷியைச் சேர்ந்தவர்களா என்ன? நாளையும் கோளையும் சாஸ்திரத்தையும் கேலி செய்கின்றீர்களே, அந்தக் கூட்டத்திற்குத்தான் நல்லது இல்லை, கெட்டதில்லை, மேல்இல்லை, கீழ்இல்லை, கோவில் இல்லை, குளமில்லை, சாஸ்திரமில்லை, புராணமில்லை, பறையனும் பாப்பானும் ஒண்ணு என்று ஆணவம் பிடித்து நாஸ்திகம் பேசிக்கொண்டு திரிகிறார்கள். நீங்களும் அதுபோல் பேசுகின்றீர்களே.

நகை வியாபாரி:— நீரே ரொம்பவும் ஆஸ்திகராயிருந்து கொள்ளும், அதைப்பற்றி நமக்கு கவலையில்லை. மரியாதையாய் நகையைக் கொடுத்துவிடும், பவுன் விலை இறங்கப்போகின்றது. இன்றைக்கு விற்காவிட்டால் எனக்கு நஷ்டம் வந்துவிடும். வேறொரு ஆசாமியும் மிகவும் ஆசையாய் காத்திருக்கின்றார், இனி தாமதம் செய்யாதீர் இருட்டாகப்போகிறது சீக்கிரம் எடுத்துக்கொண்டுவாரும்.

வைதீகர்—(வீட்டிற்குள் போய் சம்சாரத்துடன் யோசிக்ன்றார்) என்ன, ஏன் பேசவில்லை, செட்டியார் காசுமாலை கேட்கின்றார்.

அம்மா—வெகுநேர்த்தி இன்றைக்கு வெள்ளிக்கிழமை, விளக்குவைத்த நேரம், லக்ஷிமியை வீட்டை விட்டு வெளியில் கொடுக்கலாமா?

புருஷன்—எல்லாம் நான் சொல்லிப்பார்த்தாய விட்டது. செட்டியார் ஒரே பிடியாய் இப்போதே கொடுத்தாகவேண்டும் என்று கட்டாயப்படுத்திக்கொண்டு வெளியில் காத்துக்கொண்டிருக்கிறார்.

அம்மா— (பலமாய் சத்தம்போட்டுக்கொண்டு வெளியில் வருகிறபோது பேசிக்கொண்டுவருவதாவது) செட்டியாருக்குத்தான் புத்தியில்லை. உங்களுக்குமா புத்தியில்லை அவர் என்ன செட்டியா மட்டியா? வீடுவாசல் வைத்து பிழைத்த மனிதனா, நாடோடித்தடம் போக்கியா? நிறைந்த வீட்டில் விளக்கு வைத்த நேரத்தில் கலகம் பண்ண வந்திருக்கிறார். நான்போய் கேட்கிறேன். (என்றுவெளியில்வந்து) என்னசெட்டியாரே உமக்கு புத்தியில்லையா? இப்பொழுதுதான் ஏதோ கொஞ்சம் ஓஹோ என்று எங்கள் குடும்பம் தலை எடுக்கின்றது. அதுக்குள் நீர் எமனாய் வந்து விட்டீர். நாளைக்கு காலமே வாருமே அதற்குள் என்ன நீர் கொள்ளையில் போய் விடுவீரா, அல்லது ஏதோ ஒரு மனிதன் நகை வாங்க

வந்தவன் காத்திருக்கிறான் என்கிறீரே அவன் தான் கொள்ளையில் போய்விடுவானா? உமக்குத்தான் புத்தியில்லா விட்டாலும் அவனுக்காவது புத்தியிருக்க வேண்டாமா? வெள்ளிக்கிழமை நகையைப்போய் கேட்கச்சொல்லலாமா என்கிற அறிவில்லாமல் உம்மை இங்கே அனுப்பி ரகளை பண்ணச் சொல்லி இருக்கிறானே, அத்தனை அவசரம் என்ன அவனைக் கொண்டுபோகிறது?

இந்தச்சமயத்தில் மகன் வந்துவிட்டான்

மகன்—என்ன அம்மா கூச்சல் போடுகிறாய்? இவர் யார்?

தாயார்—இவரா? இவர் ஒரு நகை வியாபாரியாம். இவர் தலையில் நெருப்பைக்கொட்ட! வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் காசிமாலையைக் கொண்டுவந்து கொடுக்க வேண்டுமாம். ரகளைக்கி நிற்கிறார்.

மகன்— அதெல்லாம் இருக்கட்டும் ஜாஸ்திபேசாதே? நமக்கு காசிமாலை யேது? நம் வீட்டில் காசிமாலை இல்லையே, நேற்றுத்தானே அப்பா ஒரு காசிமாலை வாங்கவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார். அதற்குள்ளாகவா வாங்கி ஆய்விட்டது காசிமாலை?

தாயார்—உங்கப்பா யார் முகத்தில் முழித்தாரோ, இன்று காலையில் கடைக்குப்போனார், இந்த செட்டியாரிடம் மாலை ஒன்று இருந்தது, அதை எனக்குக் காட்டுவதற்காக வாங்கி வந்தார். நேற்று நினைக்கும்போதே ராகு காலம், இன்று செட்டியார் கடையில் நகை வாங்கும்போதும் ராகு காலம், வழியில் வரும்போதும் பூனை குறுக்கே போச்சுதாம்; அப்பொழுதே உங்கப்பா வேண்டாமென்று தலைசுத்தி யெறிந்து விட்டு வரவேண்டாமா? அப்படிச் செய்யாமல் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். அது கொஞ்சம் நன்றாய் இருந்தது. நானும் ஆசைப்பட்டு வாங்கலாம் என்று முடிவுகட்டி எண்ணிப்பார்த்தேன். காசு அறுபத்தி எட்டாயிருந்தது, உடனே தலையைச் சுற்றி எறிந்து விட்டேன். உங்கப்பா பெட்டியில் வைத்துவிட்டார். இப்ப வந்து செட்டியார் அவசரப்படுகிறார்; யாரோ வேறே கிராக்கி காத்துக்கொண்டிருக்கின்றதாம்; வெள்ளிக்கிழமை, விளக்கு வைத்த நேரம், முதலாவது பெட்டியைத் திறக்கலாமா? நீயே சொல்லு பார்ப்போம்.

மகன்—ஐயய்யோ! இதென்ன பெரிய அழுக்கு மூட்டையாயிருக்கிறது. குருட்டு நம்பிக்கைப் பிடுங்கலாயிருக்கின்றது; வெள்ளியாவது, சனியாவது, ராகாவது, கேதாவது! ஊரார்

மதப் போட்டி.

(சித்திரபுத்திரன்)

யாரைப்பார்த்து யார் காப்பியடித்தார்?

மதங்கள் என்பவைகளுக்கெல்லாம் ஒரு கடவுள் இருந்தாக வேண்டும், மோக்ஷம், நரகம் இருந்தாக வேண்டும், கடவுள் தன்மை பொருந்திய அவதார புருஷர்கள், குருமார்கள் இருந்தாகவேண்டும்.

இவை இல்லாமல் உலகில்எந்த மதமும் இருக்க முடியாது. இந்துமதத்துக்கோ இவைகள் மாத்திரம் போதாது அதாவது

வீட்டு நகையை வாங்கிக்கொண்டுவந்து பெட்டியில் வைத்து பூட்டிக்கொண்டு வெள்ளியுஞ் சனியும் பேசுவது வெகு ஒழுங்காய் இருக்கின்றது. பேசாமல் எடுத்துக்கொண்டுவந்து கொடுத்து விடு; இல்லாவிட்டால் பெட்டியை உடைத்து விடுவேன் தெரியுமா?

அதற்குள் அப்பா வந்துவிட்டார்.

அப்பா— என்னடா பயலே. பலே அதிகப்பிரசங்கியாய்ப் போய் விட்டே. நான் அப்போதே உன்னை "குடி அரசு" பத்திரிகையைப் படிக்கவேண்டாம். கெட்டுப்போவாய் என்று சொன்னேனா இல்லையா? அதுபோலவே படித்து கெட்டுக் குட்டிச்சுவராய் போய்விட்டாயல்லவா? கர்மம்! கர்மம்!! இந்த இழவு பத்திரிகை ஒன்று முளைத்து ஊரிலுள்ள சிறு பிள்ளைகளையெல்லாம் நாஸ்திகமாக்கி விட்டது.

மகன்—"வெகு நன்றாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு உடனே அம்மாள் இடுப்பில் சொருகி இருந்த சாவியை பிடுங்கிக்கொண்டு போய் பெட்டியைத்திறந்து நகையை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்து செட்டியாரை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான்.

பிறகு புருஷனும் பெண்ஜாதியும் ராகுகாலத்தில் அந்த செட்டி இடம் நகை வாங்கிவந்ததே பிசகான காரியம். இதுவும் வரும் இன்னமும் எவ்வளவோ கெடுதியும் வரும். என்னை அடிக்க வேண்டும்............லே என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

பல கடவுள்கள் வேண்டும் பலவிதமான மோக்ஷங்கள், பலவிதமான நரகங்கள் வேண்டும், மற்றும் பலவிதமான பிறப்புகள், முன்பின் ஜன்மங்கள் வேண்டும், பலவிதமான அவதாரங்கள், பலவிதமான குருமார்கள் வேண்டும், இவ்வளவும் போராமல் கடவுளை நேரில் கண்டு மோக்ஷத்திற்குப்போன பலவிதமான பக்தர்கள் வேண்டும்.

இத்தக்காரியங்கள் சிறப்பாக இந்துமதத்தின் உட்பிரிவு மதங்களான சைவ மதம், வைணவ மதம் என்று சொல்லப்படும் இரண்டு உட்பிரிவு மதங்களுக்கும் ஏறக்குறைய ஒன்று போலவேஇருந்து வருகின்றன.

பெயர்களைப் பொருத்தவரையில் சில மாறுதல்கள் இருக்கலாமே ஒழிய காரியங்களைப்பொருத்தவரையில் ஏறக்குறைய ஒருவரைப்பார்த்து ஒருவர் காப்பியடித்ததுபோலவே தான் இருக்கிறது.

உதாரணமாக வைணவத்தில் ராமாயணம் ஏற்பட்டதற்குக் காரணம் விஷ்ணுவும் அவரது மனைவியாகிய லக்ஷிமியும் கலவி செய்ததில் இருந்தே ஏற்பட்டது என்றால் சைவத்துக்கு கந்தபுராணம் ஏற்பட்டதற்குக் காரணம் சிவனும் அவரது மனைவியாகிய பார்வதியும் கலவி செய்ததில் இருந்தே ஏற்பட்டது.

எப்படியெனில் விஷ்ணுவும் லக்ஷிமியும் பகல் நேரத்தில் கலவியில் இருந்தபோது சில ரிஷிகள் படுக்கை அறைக்குள் பிரவேசித்து விஷ்ணுவைக்காண ஆசைப்பட்டதாகவும் துவாரபாலகர்கள் தடுத்ததாகவும் அதற்குஅவர்களை ரிஷிகள் சபித்ததாகவும், அந்தச்சாபம் தீரவேண்டியதற்காகவே ராமாயணம் முதலியவை ஏற்பட வேண்டியதாயிற்றாம்.

அதுபோலவே பரமசிவன் பார்வதியோடு பல நூறு வருஷங்கள் விடாமல் கலவி செய்து கொண்டு இருந்ததாகவும் அதனால் ஏற்படும் வீரியமும், கர்பமும் மிகக் கொடுமையான காரியத்தைச் செய்யக்கூடியதாகி விடும் என்று, தேவர்கள் முறையிட கலவி முற்றுப்பெறுவதற்கு முன்பாகவே கலவியை நிறுத்திக்கொள்ள வேண்டியதாகி அதனால் இந்திரியம் நிலத்தில் விழுந்து பிறகு என்னென்னமோ ஆபாசமாகி கடைசியாக சுப்பிரமணியர் தோன்றி கந்தபுராணம் ஏற்படவேண்டிதாயிற்று என்றுமே கதைகள் இருக்கின்றன.

அன்றியும் பூபாரம் தீர்க்கவும், ராக்ஷதர்களை அழிக்கவும் விஷ்ணு ராமராய்த்தோன்றினார்.

அதுபோலவே பூபாரம் தீர்க்கவும் அசுரர்களை அழிக்கவும் சிவன் சுப்பிரமணியனாகத் தோன்றினார்.

ராமன் பிறப்பதற்காக தேவர்கள் விஷ்ணுவை வேண்டினார்கள்.

சுப்பிரமணியன் பிறப்பதற்காகவும் தேவர்கள் சிவனை வேண்டினார்கள்.

ராமன் ராக்ஷதர்கள் என்பவர்களைக் கொன்றான்.

சுப்பிரமணியன் அசுரர்கள் என்பவர்களைக்கொன்றான்.

ராமன் ராக்ஷதர்களைக்கொல்லும்போது (மூலபலம்) கொல்லக்கொல்ல உற்பத்தியாகிக்கொண்டே வந்தன.

சுப்பிரமணியன் அசுரர்களைக்கொல்லும்போது கொல்லக்கொல்ல அசுரர்கள் தலைகள் முளைத்துக்கொண்டே வந்தன.

ராமன் பெண்ஜாதி சீதை ஒரு வளர்ப்புப்பெண். சமுத்திரத்திரத்தில் கண்டெடுக்கப்பட்டவள்.

சுப்பிரமணியன் பெண்ஜாதியும் ஒரு வளர்ப்புப் பெண். வள்ளிச்செடிக்கடியில் கண்டெடுக்கப்பட்டவள்.

சைவத்துக்கும் வைணவத்துக்கும் இனியும் அனேக விஷயங்களில் கடவுள்களைப்பற்றிய கதைப்பொருத்தங்கள் காணலாம்.

அதுபோல சைவவைணவ ஆச்சாரியார்கள் விஷயங்களிலும், சைவத்துக்கு நாயன்மார்களாகவும் வைணவத்துக்கு ஆழ்வாராதிகளாகவும், ஏற்படுத்தப்பட்டிருப்பதோடல்லாமல் பல பக்தர்களையும் அவர்கள் செய்த காரியங்கள் அதன் பயனாய்அவர்கள் அடைந்த முக்திகள் ஆகிய விஷயங்களிலும் ஒன்றுபோலவே கதைகள் கற்பிக்கப்பட்டிருப்பதையும், காணலாம்.

வைணவ பக்தர்கள் விஷயத்துக்கு பக்த லீலாமிருதம் என்னும் புத்தகம்போலவே சைவபக்தர்கள் விஷயத்துக்கு பெரிய புராணம் என்னும் புத்தகமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

வைணவ பக்தரில் ஒரு குயவர் இருந்தால் சைவ பக்தரிலும், ஒரு குயவர் இருக்கிறார்.

எப்படி எனில் வைணவக்குயவர் கோராகும்பராய் இருந்தால் சைவக்குயவர் திருநீலகண்டராய் இருக்கிறார்.

இருகுயவ பக்தர்களுடைய கதையும் ஒன்றுபோலவே அதாவது கோராகும்பாரும் தன் பெண்ஜாதியுடன் பேசாமல் இருந்து கடைசியாக மகாவிஷ்ணுவே இருவரையும் பேசும்படி செய்து சேர்த்து வைக்கிறார்.

திரு நீலகண்ட குயவனாரும் தன் பெண்ஜாதியோடு பேசாமல் இருந்து கடைசியாக சிவபெருமான் வந்தே இருவரையும் பேசும்படி செய்து சேர்த்து வைக்கிறார்.

மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பதிலும் வைணவ மதத்துக்கு சோக்கமாலா என்கின்ற தீண்டாத ஜாதிபக்தர்ஒருவர் இருந்து அவரைக் கோவிலுக்குள் விடாமல் தடுக்கப்பட்டு கனவுகண்டுகடைசியாக விஷ்ணுவந்து அழைத்துப்போகிறார்.

சைவத்திலும் தீண்டப்படாத வகுப்புக்கு நந்தன் என்பதாக ஒருவர் இருந்து பரமசிவன் வந்து கனவில் சொல்லி சாமி தரிசனம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இரண்டுமத புராணங்களிலும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் ஒரே மாதிரியான உயர்வும் மற்றவர்களுக்கு இழிவும் ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு ஜாதி பாகுபாடுகளைப்பற்றி ஒரே மாதிரியாகவே குறிப்பிட்டு பலப்படுத்தி இருக்கிறது.

இவற்றுள் சைவத்தைப்பார்த்து வைணவர்கள் காப்பி அடித்தார்களா? அல்லது வைணவர்களைப்பார்த்து சைவர்கள் காப்பி அடித்தார்களா? என்பது ஒரு ஆராய்ச்சி வேலையாய் இருக்கலாம்.

அதில் பிரவேசிக்க நமக்கு இஷ்டமில்லை. ஏனெனில், தமிழ் நாட்டில் தான் சைவத்தைப்பற்றி பிரபலமாய் பேசப்படுகின்றதே ஒழிய மற்றபடி இந்தியாவின வடபாகம் முழுவதும் ஆந்திர தேசம் உள்பட வைணவமே மேலோங்கி இருக்கிறது. வடநாட்டில் வைணவம் என்றால் தான் மாம்சம் சாப்பிடாதவர் என்று அருத்தமாகும.

ஆகையால் இவைஇரண்டிற்கும் மதக்கிரந்தங்கள், மதக்கதைகள் மதபக்தர்கள் மதக்கடவுள்கள்எனபவைகளில்ஒன்றை ஒன்று காப்பி அடித்தோ அல்லது இருவரும் ஒன்றாய் உட்கார்ந்து கூடிப்பேசியோ ஒரு முடிவுக்கு வந்துதான் இப்பெரும் புளுகு மூட்டைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது அறியக்கிடக்கின்றது.

பொறாமை! பொறாமை!!
சுந்தராம்பாள்மீது பார்ப்பனர்
பொறாமை!!!

ஊழியன் பத்திரிகையில் பகீரதன் என்னும் பேரால் தோழர் சுந்தராம்பாள் அவர்களுக்கு கடிதருபமாக எழுதியிருக்கும் கட்டுரை

———)○(———

அன்புள்ள சகோதரி சுந்தராம்பாள்!

"பிராமணர்கட்குத் தான் சங்கீதம் வரும். சூத்திரர்கட்கு அவ்வளவாக சங்கீத தேவதை அருள்புரியமாட்டாள்" என்று நெடுநாளாக நமது பார்ப்பன சகோதரர்களால் கூறப்பட்டு வந்த "மூதுரையை" பல பார்ப்பனரல்லாதார் சிதறச்சிதற அடித்துவிட்டார்கள்; அடித்துக்கொண்டுமிருக்கிறார்கள். அவ்வாறு செய்தவர், செய்பவர்களுள் சிலர் தோழர் நாயனா பிள்ளை, கோனக்கோல் பக்கிரியா பிள்ளை, தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை, பிடில் கோவிந்தசாமி பிள்ளை, ராஜமாணிக்கம் பிள்ளை, மாமுண்டியா பிள்ளை, சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை போன்ற பலப் பல-பற்பலர்-பல்லப் பல்லோர் ஆவர் இவர்கள் நீங்க, நாகசுவர உலகம் முழுதும் நம் பிராமணரல்லாதாருக்கே முற்றிலும் சொந்தமாக என்நாளுமிருந்து வருகிறது. அதுவும் நீங்கினால் ஆயிரக்கணக்கான (பார்ப்பனரல்லாத) நம்மவர்கள் வெளியே வராது மூலை முடுக்குகளில் சேற்றில் புதைந்த மாணிக்கம்போல் இருந்து வருகிறார்கள். அவ்வாறு அவர்கள் ஒளி மழுங்கி இருப்பதற்கு நம் மடத்தனமே காரணமாகும். இப்படிப்பட்ட தருணங்களில் பார்ப்பனரல்லாதாரை நினைத்தால் முதலில் ஜஸ்டிஸ், இரண்டாவது சுய-ம- கட்சிகளுடன் பார்ப்பனரல்லாத சமூகமே அடிமாண்டுபோக வேண்டுமென்று சொல்லத்தோற்றுகிறது. நமக்கு; நின்ற நின்றபடியே பாவிசைக்கும் பைரவ சுந்தரம் பிள்ளையை (——ஆக்ஷன் புலியாகிய அவரை) புகழத் தெரியவில்லை; வேறு யார்யாரையோ பெரிதாகப்பேசி பல்லைக் காட்டுகிறோம். நாடக மேடையின் உண்மை சக்கரவர்த்தியாக விளங்கிய எம்-ஆர்-கோவிந்தசாமியைப்பற்றி நமக்கு சிந்தனையே இல்லை; ஆனால் வேறு யார் யாரையோ பற்றி வாய் நிறையப் பேசுகிறோம். கடவுள் அருள் பெற்றவரென்று புகழ்ப்பெற்ற ஸ்ரீநிவாச ஆழ்வாரை அறியமாட்டோம்; பின் ஒரு......ஐப்பற்றி வானளாவப் புகழ்வோம். இப்படி நம் அறியாமை கொழுந்து விட்டெரியுமானால் எவ்வாறு பிராமணரல்லாதார் முன்னேறுவர்? எம். ஆர். கோவிந்தசாமியையும், எம்- ஜி- பைரவசுந்தரம் பிள்ளையையும் பற்றி வரலாற்று நூலெழுதி வெளியிடாத பிராமணரல்லாத சமூகம் இருந்தென்ன?

போகட்டும்- நீங்கள் எப்படியோ பிராமணரல்லாதார் மானத்தைக் காப்பாற்ற இன்று (நாடக) சங்கீத உலகின் உச்சஸ்தானத்தில் வீற்றிருக்கின்றீர்கள்.

தங்கள் சங்கீத இனிமையும் நடிப்புத் திறமையும் எங்கும் புகழப்படுகிறது.

அண்மையில் வெளியான பக்த நந்தனார் படத்தால் சினிமா உலகில் கூட தாங்கள் ஒப்பற்றவராகிவிட்டீர்கள். முதற்கண் சினிமா பகுந்த எவரும் தங்களைப்போல, நேர்மையுற்ற மனத்தினர் பரவசமுறும்படியாக நடித்துப் புகழ் நாட்டியதில்லை. அதனை நினைத்தால் தங்களை எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது.

ஆனால் ஒரு சிலருக்கு தாங்கள் வயிறெரிச்சலைக் கிளப்பிவிட்டீர்கள். அவர்கள் யாரென்றால் தங்களை பார்ப்பனரல்லாத "அவா" என்ற எண்ணிததிரியும் கோஷ்டியாராவர். அவர்கட்கு நீங்கள் குத்தகையாக "சினிமா ஸ்டார்" என்ற பெயர் வாங்கிவந்த சிலரை சிதறச் சிதர அடித்துவிட்டீர்கள் என்பதிலும், உங்கள் ஜாதிபூணூல் அணிந்ததில்லை என்பதிலும் மிகுந்த வருத்தம். வருத்தப்பட்டு என்ன செய்யலாம்!

அந்த வயிற்றெரிச்சல் பேர்வழிகள் தத்தம் மனதை தேற்றிச்சொள்வதற்காக, என்னென்னமோ பிதற்றி வயிற்றிலடித்துக் கொள்கிறார்கள். தங்கள் மீது அவர்கள் ஏற்றும் குற்றம் தங்கட்கு மீசையில்லை என்பதொன்று! உடம்பில் துணியைப் போட்டுக்கொண்டீர்கள் என்பது மற்றொன்று. போட்டோ எடுத்தவர் வாய்தெரியும்படியாக "போக்கஸ்" செய்துவிட்டார் என்பது பிறிதொன்று! போட்டோ எடுக்கப்பட்ட 'பிழையும்' தங்கள் குற்றந்தானாம்! அடடா! எவ்வளவு அழகான குற்றங்கள்? பெண் பிள்ளையின் முகத்தில் மீசையில்லையென்று கூறுபவனுக்கு ஒரு கம்பளியாட்டைக் காண்பிப்பதைத்தவிர வேறு வழியுண்டா?

தாங்கள் பாடிய பாட்டு அபசுவரம் நிறைந்திருக்கிறதென்கின்றார் ஒரு பிரகஸ்பதி- அவர் ஒரு கால் நாரதரின் சொந்தக்காரராகவோ, யக்ஷகின்னர கிம்புருஷ வித்யாதர சங்கீத ஞானியாகவோ இருக்கலாம். தஙகளைப்போல இவ்வளவு இனிமையாக எவரும் பாடவில்லை என்பது செவியுள்ள எல்லோருடையவும் அபிப்பிராயம்- எங்கட்கு இப்படிப்பட்ட பாட்டுப் போதும்- புலியோ கழுதையோ இம்மியும் விடாது சாஸ்திரப்படி பாடி கனைத்து உறுமிக் கொண்டிருந்தால் அதனை மேற்படி தேவகானபிரியர்கள் கேட்டு ஆநந்திக்கட்டும்.

அன்று நீங்கள் "நான் லக்ஷ ரூபாய் வாங்கியதற்காக சிலர் பொறாமைப் படுகிறார்கள்" என்று பிரசங்கத்தில் சொன்னபோது, அப்படிப் பொறாமைப்பட்ட மகான்கள் யாரென்பது தெரியாமலிருந்தது- இன்று அவர் யாரென்பதைத் தெரிந்து கொண்டேன்- ஏன் அந்த ஆசாமிக்கு வயிற்றெரிச்சலோ?

கர்ப்பத்தடை.

பன்னிரண்டு கடிதங்கள்.

(அடியிற்கண்ட கடிதங்கள் குழந்தைகளைப் பெற்றதின் பயனாக பல பெண்கள் அடைந்த துன்பங்களைப்பற்றி டாக்டர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்களாகும். இதை நன்றாய்ப்படித்துப்பார்த்தால் பெண்களின் துக்க நிவர்த்திக்கு பிள்ளைப்பேற்றைத் தடுக்கும் முறைகளைக் கண்டு பிடித்துப்போதிப்பது நியாயமா அல்லவா வென்பதும், அவசியமா இல்லையாவென்பதும் விளங்கும். எப்பொழுதும தங்களுக்கு இனி குழந்தையே வேண்டாம் என்று கருதுகின்ற பெண்கள் அனேகர் இருந்தாலும், அவர்கள் எல்லோரும் அனேகமாய்க் கடவுளே குழந்தைகளைக் கொடுப்பதால் நமது இச்சையால் என்ன நடக்கும் என்று கருதி, மேலும் மேலும் பெற்று அவதிப் படுகின்றார்கள். ஆதலால் இப்பபடிப்பட்ட மக்களுக்கு குழந்தைகளைப் பெறாமல் இருப்பதற்குறிய வழி ஏதாவது இருந்து அவைகளைப் போதிப்பது எப்படிக்குற்றமாகும் என்பதை பொது மக்கள் உணரவே இக்கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டதாகும். அவர்களுக்கு இவ்வுதவி அத்தியாவசியமாகவும், இன்றியமையாததாகவும தோன்றும்பொழுது அவர்களுடைய குடும்ப வைத்தியர்களின் உதவியையும், யோசனையையும்

அதிகமாக எழுத நினைக்கவில்லை- நீங்கள் இந்த ஒரு சினிமாவி லிருந்து நமது பிராமண சகோதரர்கள் எப்படிப்பட்டவர்களென்று தெரிந்துகொள்ளுங்கள்- வீட்டில் "For Brahmins Only" என்று வாடகைப் போர்டுவிட்டு, கடற்கரையில் சமதர்ம சுயராஜ்யப் பிரசங்கம் புரியும் பரமாத்மாக்கள் முன் மையை தெளிவு படுத்திவிட்டு ஒரு சினிமாப் படத்தை வெளிக்கொணர்ந்ததற்காக தங்களுக்கு பெரிய வணக்கம்.

யார் யாரோ என்னென்ன நோக்கத்துடனோ என்னென்னமோ எழுதுவதற்காக மலைத்துவிட வேண்டாம்- சினிமா உலகில் தாங்கள் தான் முதல் நிற்பவர்- தங்கட்கு அந்த சிறந்த ஸ்தானம் இல்லையானால் பததிரிகை உலகம் இவ்வளவு அல்லோல கல்லோலப் பட்டிருக்குமா? வேறு எந்த நடிகருக்காவது இவ்வளவு அதிர்ந்ததா பத்திரிகை உலகம்! அதுவொன்றே தங்கள் திறமைக்குத் தகுந்த சாக்ஷியம் அன்றோ? தங்கட்கு மேன்மேலும் ஆரோக்கியமும் கீர்த்தியும் பெருகுவதாக.

மிக்க ஆவலுடன் நாடுகின்றார்கள் ஆகையால், வைத்தியர்கள் மட்டுந்தான் அவர்களுடைய பரிதாபகரமான நிலைமையிலிருந்தும், வியாதியினின்றும், அவர்களுடைய அகால மரணத்தினின்றும் அவர்களைக் காப்பாற்றமுடியும்.

முதற் கடிதம்.

ஐயா,

நான் தங்களுக்கு கடிதம் எழுதி, இப்பொழுது சுமார் ஒரு வருஷமிருக்கலாம். அப்பொழுதே, விவாகமாகிய இரண்டு வருஷங்களுக்குள் எனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்திருந்ததினால், இனிக்குழந்தைகளே வேண்டியதில்லையென எண்ணிக்கொண்டிருந்தேன். நான் தங்களுக்கு எங்களுடைய குடும்ப வைத்தியரைப் பற்றி ஏற்கனவே அறிவித்திருக்கின்றேன். அவர், தற்கால நிலைமையைக் கேற்றவாறில்லாததால், தாங்கள் அவர்மூலியமாக அனுப்பும் கர்ப்பத்தடை முறை செய்திகளைத் தும் எனக்கு எட்டுவது அரிதாயிருக்கின்றது. அவர் வேலையில்லாமல் ஓய்ந்திருக்கும சந்தர்ப்பங்களை நான் அறிந்து, அவரைச் சந்தித்துப் பேசுவதற்குள், நான் மீண்டும் கர்ப்பிணியாய்விட்டேன். மூன்று வயதிற்குள் குறைந்ததான மூன்று குழந்தைகள், இப்பொழுது எனக்கு இருக்கின்றன. என்னுடைய முதல் குழந்தைக்குப் பூர்த்தியாக மூன்று வயது நிறைவேறுவதற்குள், எனக்கு நான்கு குழந்தைகளிருக்குமென நினைக்கின்றேன் ஏனெனில், நான் மீண்டும் இப்பொழுது ஆறுமாத கர்பினியாயிருக்கின்றேன். நான் என்ன செய்ய வேண்டுமென்பது, எனக்கு அவசியம் உரைக்கத்தான் வேண்டும். அப்படி உரைக்காமலிருந்து, நான் இம்மாதிரியே இன்னும் சென்றுகொண்டிருந்தேனானால் ஒரு சமயம் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடுமெனக் கருதுகின்றேன்.

* * *

இரண்டாம் கடிதம்.

எனக்கு முடமான ஒரு மைத்துணி இருக்கின்றாள். அவளுக்கு மூன்றரை வருடங்களுக்குள் மூன்று குழந்தைகள் பிறந்திருக்கின்றன. ஒவ்வொரு குழந்தையையும், அயுதங்களினால் தான் வெளியெடுக்கும்படி நேரிட்டது. இம்மூன்றாவது பிரசவமே அவளுடைய பிராணனுக்கு பேராபத்தை விளைவித்துவிட்டது. அவள் செத்துப்பிழைத்தாளென்றே கூறவேண்டும். அவள் பிரசவிக்குந் தருணத்தில் அருகேயிருந்து உதவி செய்த வைத்தியர், அவள் மீண்டும் மற்றொரு குழந்தையை

விரும்பமாட்டாளென, தாம் நம்புவதாக உரைத்தார். ஆனால் அவருடைய அத்தகைய மொழிகளால், அவளுக்கு ஒருவிதப் பிரயோஜனம் ஏற்படவில்லை. ஏனெனில், அவள் கர்ப்பந் தரியாமலிருப்பதற்காக என்ன செய்யவேண்டுமென்பதை அறியாதவளாயிருக்கின்றாள்.

* * *

மூன்றாம் கடிதம்.

நான் முப்பத்திரண்டு வயதுள்ள ஓர் பெண் மூன்று மாதங்களுக்கு முன், நான் ஒரு அழகிய ஆண் குழந்தையைப் பிரசவித்தேன். அக்குழந்தை பிறந்தது முதல், என்னுடைய இரண்டு கால்களிலுமுள்ள நரம்புகள் வீங்கி, என்னை அங்குமிங்கும் நடமாடவொட்டாமல் படுக்கையில் வீழ்த்திவிட்டது. மேலும் என்னுடைய வலது கை ஆரம்பிக்குமிடத்திலிருந்து அடிவயிறு வரையும் ஒருவித நோவாகவுமிருக்கின்றது. இவைகளினால், நான் படுத்தபடுக்கையாகவேயிருக்கும்படி நேரிட்டிருக்கின்றது. இக்காரணத்தால், எனது உடம்பு மெலிந்து, நல்ல இரத்தவோட்டமில்லாததால் என்னுடைய இருதயமும் பலவீனமடைந்திருக்கின்றது. இக்காரணங்களால், நான் மூன்று வருஷங்களுக்குள் மீண்டும் கர்ப்பிணியானால், அது ஒரு சமயம் உன் உயிருக்கே மிக்க அபாயத்தை விளைவித்தாலும், விளைவிக்கக்கூடுமென என்னுடைய வைத்தியர் கூறுகின்றார். அவ்வாறு கர்ப்பம் தரியாதிருக்க நான் என்ன செய்யவேண்டுமென அவரைக் கேட்டதற்கு, அவர் "மிக்க ஜாக்கிறதையாயிரு, இல்லாவிடில் சம்போகத்தை அறவே நீக்கிவிடு"யென உரைத்தார். நான் என்ன செய்யட்டும்? அவர் உரைத்தது, உண்மையாகவே, நல்ல யோசனையும், அறிவுமல்லவே!

* *

நான்காம் கடிதம்.

கர்ப்பத்தடை முறைகளைப்பற்றிய முழுவிபரமும் எனக்கு மிக்க அவசியமாக வேண்டியிருக்கின்றது. எனக்கு இருபது வயதாகின்றது விவாகம் நடந்து இரண்டு வருஷங்களுக்குள் எனக்கு மூன்று தடவை கர்ப்பச்சிதைவுண்டாகி, அகாலப்பிரசவங்கள் நேரிட்டு விட்டது. கடைசியாக நேரிட்ட அகாலப்பிரசவத்தில், இரத்தம் அதிகம் வெளிப்பட்டு, ஆறுபோல் ஓடியது. அப்பொழுது நான் இறந்துபோனதாகவே எல்லோரும் கருதினார்கள் ஏனெனில், நானிருக்குமிடத்திலிருந்து பதினாறு மைல் தூரம் சென்றால்தான் ஒருவைத்தியரைப்பார்க்க முடியும். எங்களிடத்தில் மோட்டார் வண்டியு

மில்லை. குறைந்தது இரண்டு மைல் தூரம் சென்றால் தான், என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர், என்று சொல்லக்கூடிய ஒருவரைப்பார்க்க முடியும். என்னுடைய வைத்தியரோ, எனக்கு கர்ப்பத்தடை முறைகளைப்பற்றியவர்த்தமானங்களொன்றும் கூறுவதற்கு மறுக்கிறார். நான் அம்முறைகளைக் கூறும்படி அவரை வற்புறுத்தினால், அவர் எனக்கு "முதலில் குழந்தைகள் பிறக்கட்டும்" யெனமட்டும் உரைத்து விடுகின்றார். ஆனால், நான், கர்ப்பமான சில மாதங்களுக்குள், எனக்கு கர்ப்பச்சிதைவுண்டாகி, அகாலப்பிரசவம் நேரிடுவதால்,எவ்வாறு குழந்தைகளை சுகமாக நான்பிரசவிக்க முடியும்? இவ்வித சம்பவங்களால், என்னுடைய உடம்பு மெலிந்து, மெத்த பலவீனமுள்ளவளாக யிருக்கின்றேனேயன்றி, குழந்தை வேண்டுமென்னும் ஆசை நிறைவேறவேயில்லை. அவ்வாசை எப்பொழுது நிறைவேறும்?

* * *

ஐந்தாம் கடிதம்.

கர்ப்பத்தடை முறைகளில் எனக்கு அநேக வருஷங்களாகவே மிக்க நம்பிக்கையுண்டு. அப்படியிருந்தபோதிலும், மிக்க திருப்தியையளிக்கக் கூடியதும், உபயோககரமுமான ஓர் முறையை நான் இன்னும் அறிந்துகொள்ள முடியவில்லை. எங்களுடைய வைத்தியர் பழையகாலத்து மனிதராயிருப்பதால், சம்போகத்தை அறவே நீக்கிவிடவேண்டுமென மட்டும் கூறுகின்றாரேயல்லாமல், கர்ப்பத்தடை முறையை அனுஷ்டிக்கும் மார்க்கத்தைக்கூற மறுக்கிறார். நான் ஐந்து தடவை கர்ப்பம் தரித்தேன் ஆனால், இப்பொழுது உயிருடன் இரண்டு குழந்தைகள் மட்டுமிருக்கின்றன. என்னுடைய வைத்தியரும், மீண்டும் நான் பிரசவிக்கப்போதுமான பலமுடையவளல்ல என உரைக்கின்றார். நான் என்ன செய்யவேண்டும்? எனக்கோ, வயது முப்பத்திரண்டுதானாகின்றது. என்னுடைய கணவனின் வயதோ, நாற்பத்தியொன்று.

* * *

ஆறாம் கடிதம்.

கர்ப்பத்தடை முறைகளை அறிய விரும்பினால், நான் தங்களுக்குத்தான் எழுதவேண்டுமென கேள்விப்பட்டேன். ஏனெனில், பத்து வருஷங்களுக்குள், நான் எட்டுதடவைபிரசவிக்கும்படி நேரிட்டது. அவ்விதப்பிரசவங்களில், ஏழு பிரசவங்கள், கர்ப்பம் பூரணவளர்ச்சியடைந்து முதிர்ந்த பிறகும், ஒன்று, கர்ப்பமடைந்த நான்காவது மாதத்தில் கர்ப்பச்சிதைவுண்டாகி, அகாலப் பிரசவமுமாக சம்பவித்து எனக்குக்குழந்

தை இப்பொழுதுதான் பிறந்து, பன்னிரண்டு நாளாகின்றது. என்னுடைய மூத்த மகளின் வயதோ ஒன்பதாகின்றது. நான் பிரசவித்து, படுக்கையிலிருக்கும்பொழுது, எனக்கு உதவியாயிருக்கும்படி நான் ஒருவரையும் அமர்த்திக்கொள்ள முடியவில்லை. ஏனெனில், என்னுடைய கணவனின் சம்பாதனை, அவ்வித உதவிக்காக வைக்கப்படும் ஆளுக்கு, சம்பளம் கொடுக்க முடியாத நிலைமையிலிருக்கின்றது. உம்முடைய குழந்தைகள், குளிரினால் நடு நடுங்கிக்கொண்டும், உடுக்கப்போதுமான உடைகளின்றியும், உண்ணப்போதுமான உணவுகளின்றியும் தவித்துக்கொண்டிருப்பதை நோக்க, உமக்கு எத்தகைய துன்பத்தை அக்காட்சியளிக்குமென்பதைச்சற்று சிந்தித்துப்பார்க்கும்படி வேண்டி, கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* * *

ஏழாம் கடிதம்.

எனக்கு வயது இருபத்தியெட்டு மட்டுந்தானாகின்றது. திடகாத்திரமும், பலசாலிகளுமான ஏழு குழந்தைகள் இப்பொழுது எனக்கு இருக்கின்றன. ஆனால், நானோ, மிக்க மெலிந்தவளாயும், நல்லிரத்தமில்லாமல் வெளுத்துப் போனவளாயும், பலவீனமுள்ளவளாயுமிருக்கின்றேன். என்னுடைய பெயர் பெற்ற வைத்தியரொருவர், நான் கற்ப்பினியாகவேக் கூடாதென பன்முறையும் கூறியிருக்கின்றார். ஆனால், அத்தகைய உதவியை எனக்கு அளித்து, உதவுவதற்கு அவருக்கு யாதொருவித சுதந்திரமுமில்லையென நான் கருதுகின்றேன். ஏனெனில் கர்ப்பத்தடை முறைகளில், குறித்த ஓர் முறையை அனுஷ்டிக்கும் வழியை எனக்கு அவர் கூறவேயில்லை. இப்பொழுது நான்கு மாத வயதுள்ள ஒரு ஆண் குழந்தை எனக்கிருப்பதாலும், மீண்டும் அதற்குள் நான் எங்கு கர்ப்பந்தரித்துவிடுகின்றேனோவென்று அதிகமாகப் பயப்பட்டுக்கொண்டேயிருப்பதால், தங்களுடைய பதிலை நான் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

* * *

எட்டாம் கடிதம்.

எனக்கு விவாகம் நடைபெற்று ஒன்பது மாதங்களாகின்றன. இப்பொழுதோ எனக்கு ஓர் குழந்தை பிறந்திருக்கின்றது. ஆகையால் மீண்டும் அதி சீக்கிரத்தில் நான் கர்ப்பம் தரிப்பதினின்றும் காப்பாற்றிக்கொள்ள விரும்புவதால், கர்ப்பத்தடை முறைகளைப்பற்றிய முழுவிபரமும் அறிந்துகொள்ள நான் மிக்க ஆவலுடையவளாகயிருக்கின்றேன்.

* * *

ஒன்பதாம் கடிதம்.

என்னுடைய மனைவிக்கு இப்பொழுதுதான், வயிற்றைக் கீறி, கருப்பையை சேதித்து, சிசுவைத்துண்டித்து வெளியெடுத்தார்கள். அப்பொழுது அவள் மீண்டும் கர்ப்பந்தரிக்கவே கூடாதென உரைத்தார்கள். ஆனால், நமது தேசத்து, சட்டங்களுக்கு, அஞ்சி, ஒருவரும் அவளுக்குக் கர்ப்பத்தடை முறைகளைப்பற்றிய வர்த்தமானங்களொன்றும் போதிக்கவில்லை. எப்பொழுதாகிலும் அவள் தவறி, மீண்டும் கர்ப்பிணியானால், உடனே வந்து அறிவிக்கும்படி எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தாள். கர்ப்பத்மடை முறைகளைப்பற்றிய விவரங்கள் எப்படி, யாரிடமிருந்து அறிந்து கொள்ளுவதென்பதையறிய, நான் மிக்க ஆவலுள்ளவளாயிருக்கின்றேன். ஏனெனில், குதிரையானது, லாயத்திலிருந்து திருட்டுப்போனபிறகு, லாயத்தின் கதவுகளைப்பூட்டி வைப்பதில் பிரயோஜனம் ஒன்றுமில்லையென நான் கருதுகின்றேன். இம்முக்கியமானதும், அவசியமானதும், இன்றியமையாததுமான விஷயத்தை அதாவது கர்ப்பத்தடை முறைகளைக் குறித்து வைத்தியர்கள் யாதொரு விதமான வர்த்தமானங்களும் ஜனங்களுக்குப் போதிக்கக்கூடாதென, நமது தேசத்துச்சட்டம் உண்மையாகவே அவர்களைத்தடுக்குமானால், அப்பொழுது நமது தேசத்திலுள்ள வைத்தியர்களின் சங்கம் அவ்வித சட்டங்களை எதிர்த்துப்போராடி, அச்சட்டங்களை மாற்ற வழிதேடவேண்டும். ஏனெனில், மற்ற எந்த உத்தியோகமும் இத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவைகளை சகித்துக்கொண்டிருக்கவே, இருக்காது.

* * *

பத்தாம் கடிதம்.

மாதர்களுக்குக் கர்ப்பத்தடை முறைகள் அவசியம் கற்பிக்கப்படவேண்டுமானால், அவர்களில் முக்கியமாக எனக்குத்தான் அவ்வுதவி மிக்க அவசியமாகவும், இன்றியமையாததாகவும் காணப்படுவதால், அம்முறைகளைப் பற்றிய முழு விபரங்களும் அறிந்துகொள்ளுவதற்காக நான் தங்களுக்கு இக்கடிதம் எழுதலானேன். என்னுடைய வயது பதினேழு. எனக்கு பதின்மூன்றாவது வயதில் விவாகம் நடந்தது இப்பொழுது நான் ஆறு குழந்தைகளுக்கு தாயாராக இருக்கின்றேன். என்னுடைய முதல் குழந்தைக்கு பதின்மூன்றாவது மாதம் நடந்துகொண்டிருக்கும் பொழுது, எனக்கு என்னுடைய இரண்டாவது குழந்தை பிறந்தது. குக்குழந்தைக்கு பத்து மாதங்களானதும், நான் மீண்டும் பிரசவித்தேன். அப்பொழுது என

க்கு இரட்டைக்குழந்தைகள் பிறந்தன. இரட்டைக் குழந்தைகள் பிரசவமாகி, பத்துமாதங்கள் கடப்பதற்குள் நான் மறுபடியும் மற்றொரு இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்தேன். இப்பொழுதோ, மீண்டும் அம்மாதிரியே சம்பவிக்குமென நினைக்கின்றேன். இவ்வாறு நான் பிரசவித்துக்கொண்டு வருவதால், என்னுடைய புருஷன் என்மீது மிக்க வெறுப்பாயிருக்கின்றார். ஏற்கனவே எங்களுக்கு அதிகக் குழந்தைகள் பிறந்துவிட்டதாக அவர் கருதுகின்றார். எனக்கும் இத்தகைய பிரசவங்களால், உடம்பு மெலிந்து, போஜனமும் சரியாக ஜீரணியாமல், தினமும் இளைத்துக்கொண்டே வருகின்றேன். சந்தோஷமாகவும், சுகமாகவும் இருக்க என்னால் முடியவேயில்லை.

*　　*　　*

பதினொன்றாம் கடிதம்.

என்னுடைய பன்னிரண்டாவதுவயதில் எனக்கு விவாகம் நடந்தது. எனக்குப்பதிமூன்றாவது வயது முடிய இன்னும் ஒரு மாதமிருக்கும்பொழுதே, நான் என்னுடைய முதல் குழந்தைக்குத் தாயாகிவிட்டேன். இப்பொழுது என்னுடைய வயது முப்பது. இவ்வயதில் நான் பதினொரு குழந்தைகளுக்குத் தாயாக இருக்கின்றேன். இப்பதினொரு குழந்தைகளிலும் பத்துக்குழந்தைகள் இப்பொழுது ஜீவித்திருக்கின்றன. சென்ற இரண்டு வருஷகாலமாக என்னுடைய திரேகாரோக்கியம் நாசமாகிவிட்டது. ஆகையால் இம்மாதிரியானப் பிரசவங்கள் எனக்கு மீண்டும் நேரிடுமானால் நான் பிழைப்பது அரிதென நினைக்கின்றேன். நான் மீண்டும் பிரசவியாதிருப்பதற்காக எவ்வித முறைகளை அனுஷ்டிக்கவேண்டுமோ, அம்முறைகளுக்குரிய முழு விபரங்களைவும், தயவு செய்து எனக்குத் தெரிவிக்கும்படியாக மிக்கத்தாள்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனெனில், இப்பொழுதே எங்களால் வைத்துப் போஷித்து, காப்பாற்றமுடியாத அளவுக்கு மீறிய அத்தனைக் குழந்தைகளுடையவர்களாயிருக்கின்றோம்.

*　　*　　*

பனிரண்டாம் கடிதம்

தங்களால எனக்குப் போதிய உதவியளிக்கமுடியுமா என்பதை அறிந்துகொள்ளுவதற்காக வேண்டி, நான் தங்களுக்கு இககடி

தம் வரையலானேன். என்னுடைய பதினான்காவது பிரயத்தில் எனக்கு விவாகம் நடந்தது. இப்பொழுதோ நான் பதினாறு குழந்தைகளுக்குத் தாயாராகிவிட்டேன். அக்குழந்தைகளில், பதினான்கு குழந்தைகள் உயிருடனிருக்கின்றன. மீண்டும் மற்றொரு குழந்தையை, நான் சீக்கிரத்தில் பிரசவிக்கவேண்டியிருக்கின்றது. ஏனெனில், நான் இப்பொழுது மூன்றுமாத கர்ப்பிணியாயிருக்கின்றேன். இக்கர்ப்பம் தரித்த நாள் முதற்கொண்டு நான் நோயாளியாகி, கடந்த இரண்டுமாத காலமாகப் படுத்தப் படுக்கையிலேயே இருக்கின்றேன். என்னால் எழுந்திருந்து நிற்கவும் முடியாத நிலைமையில் நான் இப்பொழுது இருக்கின்றேன். நான் மீண்டும் கர்ப்பிணியினால் என்னுடைய உயிருக்கே ஒரு சமயம் ஆபத்து நேரிட்டாலும் நேரிடலாமென என்னுடைய வைத்தியர் எனக்கு எச்சரிக்கை செய்திருந்தும், நான் என்னுடைய பதினேழாவது குழந்தையை பிரசவிக்கக்கூடிய நிலைமையிலிருக்கின்றேன். என்னுடையக் குழந்தைகளில், ஒரு குழந்தைக்கு விவாகமும் நடந்தேறிவிட்டது. பாக்கியிருக்கப்பட்ட பதின்மூன்று குழந்தைகளைப் போஷித்துக் காப்பாற்றவேண்டியவளாகவுமிருக்கின்றேன். ஆனால் என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. என்னுடைய வயதோ இப்பொழுது முப்பத்தொன்பதுதான ஆகின்றது. அதற்குள்ளாகவே எல்லாம் எனக்கு முடிந்துவிட்டதுபோல் காணப்படுகிறது.

பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம். எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி.

பாரதியார்.

குடி அரசு வெளியீடுகள்.

8-அணா வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள் (Dr. R. P. பரஞ்சிபை.)
இராமாயண ஆராய்ச்சி 2-ம் பாகம் (சந்திரசேகரப் பாவலர்)
கைவல்ய சாமியாரின் கட்டுரைகள், (கைவல்யம்)

4-அணா வெளியீடுகள்.

இராமாயண ஆராய்ச்சி 1-ம் பாகம் (சந்திரசேகரப் பாவலர்)
லெனினும் மதமும்.
விவாஹ விடுதலை (K. M. பாலசுப்ரமண்யம்)
கடவுளும் பிரபஞ்சமும் (M. சிங்காரவேலு)
பங்கஜம் or பார்ப்பனக்கொடுமை
சுதந்தரப் போர்

3-அணா வெளியீடுகள்.

பொது உடமைத் தத்துவங்கள்
தர்ம பரீக்ஷை
மேயோ கூற்று மெய்யா பொய்யா (C. A. அய்யாமுத்து)

2-அணா வெளியீடுகள்.

சீர்திருத்தம் (ஈ. வெ. ராவின் சொற்பொழிவு)
மனுநீதி விளக்கம் (சிவானந்த சரஸ்வதி)
அகத்தியர் ஆராய்ச்சி (வித்வான் நமச்சிவாய முதலியார்)
இராமலிங்க சுவாமிகள் பாடல்கள்

1-அணா வெளியீடுகள்

போல்ஷ்விக் முறை
பர்னாட்ஷா உபந்நியாசம்

½-அணா வெளியீடுகள்

சமதர்ம உபந்நியாசம் (M. சிங்காரவேலு)
இலங்கைச் சொற்பொழிவு (ஈ. வெ. ரா.)

இதர பதிப்பக வெளியீடுகள்.

1-ரூபாய் வெளியீடுகள்.

The Crux of the Indian Problem, (Dr. R. P. Pranjibi)
The Right of the temple entry (P. Chidambaram)

8-அணா வெளியீடுகள்.

சிதம்பர ரகசியம் (தென்பாதி கனகசபை)
மாதர் சுதந்தரம் (சாமி சிதம்பரனார்)
நச்சுப்பொய்கை (C. A. அய்யாமுத்து)

6-அணா வெளியீடு.

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

The Crux of the Indian Problem. (Dr. R. P. Paranjpye)

The Right of the temple entry (P. Chidambaram)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]